16.1.2023
திங்கட் கிழமை

1. பகவத் ராமானுஜரின் ஶ்ரீவைகுண்ட கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 5***

***ததஸ்ச அநுபூயமாந பாவவிசேஷ: நிரதிசய ப்ரீத்யா அந்யத் கிஞ்சித் கர்த்தும் த்ரஷ்டும் ஸ்மர்த்தும் அசக்த: புநரபி சேஷ பாவமேவ யாசமாந: பகவந்தமேவ அவிச்சிந்ந ஸ்ரோதோரூபேண அவலோகநேந அவலோகயந் ஆஸீத*** - ஆத்ம சமர்ப்பணத்துக்குபின்

2. ***சூர்ணிகை பத உரை*** :

# ***ததஸ்ச அநுபூயமாந பாவவிசேஷ: நிரதிசய ப்ரீத்யா*** - இவ்வாறு ஸர்வேஸ்வரன் அருகில் நின்று வணங்கிய பின்னர் எம்பெருமானின் ஸர் ரக்ஷக சக்தியைக் கண்டு வியந்து இதனால் உண்டான மிகிழ்ச்சியால்

# ***அந்யத் கிஞ்சித் கர்த்தும் த்ரஷ்டும் ஸ்மர்த்தும் அசக்த:*** - வேறு எதையும் செய்வதும் பார்ப்பதும் தினைக்கவும் சக்தி அற்றவனாக

# ***புநரபி சேஷ பாவமேவ யாசமாந:*** - பகவத் கைங்கர்யத்தையே மீண்டும் மீண்டும் யாசித்து

# ***பகவந்தமேவ அவிச்சிந்ந ஸ்ரோதோரூபேண*** - எம்பெருமானை நிலைத்த பார்வையோடு

# ***அவலோகநேந அவலோகயந் ஆஸீத*** - எப்போதும் பார்த்துக் கொண்டே இருப்பேன்

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

# நிரந்தர பகவத் அனுபவமே, அல்பத்வம் அற்றது. இதனை, சாந்தோக்ய உபநிஷத்தில்,

***யோவை பூமா தத் ஸுகம். யத்ர நாந்யத் பச்யதி. நாந்யத் ஸ்ருணோதி. நாந் யத் விஜாநாதி. ஸ பூமா***

என்கிறது சாந்தோக்ய உபநிஷத். இதையே விஷய வாக்யமாகக் கொண்டு, வேதவ்யாஸர் ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

***பூமா ஸம்ப்ரஸாதத்யுபதேஷாத்***

என அருளியிருக்கிறார். அதற்கு ஶ்ரீராமானுஜர் தனது ஶ்ரீபாஷ்யத்தில் விளக்கம் அருளியுள்ளார்.

அதாவது, எல்லையற்றதுமான, மிகச் சிறந்ததுமான, ஆனந்த ரூபமான ப்ருஹ்மத்தை (ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனை), அவனது குணங்களோடும் ஐஸ்வர்யங்களோடும், அனுபவிக்கும் போது அனுபவிப்பவன் வேறொன்றையும் காண்கிறதில்லை; கேட்பதில்லை; அறிகிறதில்லை. காரணம், ஸர்வேஸ்வரனை ஆத்மாவாக கொள்ளாத (ப்ருஹ்மத்தின் ஆதிக்கத்தில் இல்லாத) பொருட்கள் எங்கேயும் கிடையாதபடியால் !

அனுகூலமாய் உள்ள அனைத்தும் ஸுகத்தை கொடுக்கக்கூடியது. அதனால், மேலும் ப்ருஹ்மத்தை விட உயர்ந்த ஸுக அனுபவம் வேறொன்றும் இன்மையால், முக்தன் வேறொன்றையும் காண்கிறதில்லை.

# ஆக, போக்யம் என்கிற வார்த்தை ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனையும் குறிக்கும். ஆக, ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனை அடைய வேண்டிய உயர்ந்த இலக்காக அறியலாம். ஸ்வாமி தேசிகன் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ***பரிகர விபாக அதிகாரத்தில்*** அருளிச் செய்துள்ளார்.

***தண்ணியரான பிறருடைய பேறே தன் பேறாக்கியும்***

*குமாரனோடு ஒக்க த்ரியக்கான கிளிக்கு பாலூட்டும் கணக்கிலே*

அதாவது, கிளியை கூட்டில் வைத்து ரஸிக்கும் ஒருவன், அதற்கு பால் பழம் கொடுத்து, தான் மகிழ்கிறான். அதனால் அவன் ப்ரதானமாக பலனை அடைகிறான் என்பதாயிற்று. ஆனால், பால் பழத்தை சுவைத்து ரஸிப்பதினால், அந்த சேதனான கிளியும், அப்ரதானமாக ஒரு பலனை அனுபவித்தாயிற்று அனறோ!

அது போல, ஜீவர்கள் மோக்ஷத்தை அடைவதில் எம்பெருமான் ப்ரதான பலியாகவும், ஜீவர்கள் அப்ரதான பலியாகவும் ஆகிறார்கள்.

# இவ்விஷயத்தை ஸ்வாமி திருப்பாணாழ்வார், அமலனாதிபிரான் கொண்டும் தெளியலாம் :

***கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை அண்டர் கோன் அணி அரங்கன் என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே***

அதாவது,

ஸர்வருக்கும் ஸ்வாமியாய், ஆதாரமாய், நியந்தாவாய் இருக்கும், சக்ரவர்த்தி திருமகனுக்கே ஆராத்ய தெய்வமான அரங்கன், ஸௌலப்யத்தால் வெண்ணை திருடியவனாக அவதரித்தாலும், அவனே பரதத்வம் என்கிற எண்ணம் என் நினைவில் இருந்து எப்போதும் நீங்காது. **அவன் அந்தர்யாமியான ஸகல வஸ்துக்களும் அனுகூலமானவைகளே, என்றபடி.**

***கொண்டல் வண்ணனை*** **-** காளமேகம்போன்ற வடிவையுடையனும்

***கோவலன் ஆய் வெண்ணெய் உண்டவாயன்*** **-** கோபால குமாரனாகப் பிறந்து வெண்ணெயமுது செய்த திருவாயை யுடையனும்

***என் உள்ளம்*** **-** என்னுடைய நெஞ்சை

***கவர்ந்தானை*** **-** கொள்ளை கொண்டவனும்

***அண்டர் கோன்*** **-** நித்யஸூரிகட்குத் தலைவனும்

***அணி அரங்கன்*** **-** (பூமண்டலத்துக்கு) அலங்காரமான திருவரங்கத்தில் கண்வளர்ந்தருள்வபனும்

***என் அமுதினை*** **-** எனக்குப் பரமபோக்யமான அம்ருதமாயிருப்பவனுமான அழகிய மணவாளனை

***கண்ட கண்கள்*** **-** ஸேவிக்கப்பெற்ற (பரமபத நாதனையும்)

***காணா*** **-** .காணமாட்டா

அதாவது, பரமபதத்தில் எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்த பின்னர், வேறு எதிலும் நாட்டம் உண்டாகாது ; ஏனெனில் அப்ருஹ்மாத்மகவான வஸ்துக்கள் என்கிறதொன்று இல்லாத படியால்.

4. ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# ***ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்*** **-**

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (7-14) கூறும் போது,

*தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்ய்யா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே*

அதாவது, 'என்னுடைய முக்குணங்களாலான ப்ரக்ருதி என்கிற மாயையை கடப்பதற்கு என்னையே சரண் அடைய வேண்டும்', என்கிறான்.

இதனை பகவத் ராமானுஜர் கீதா பாஷ்யத்தில், ஸாத்யோபாயமான பக்தி யோகத்துக்கு அங்கமாக ஓர் ப்ரபத்தியை விவரிக்கிறார்.

# *ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்* -

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்துக்கு வ்யாக்யானமான பகவத் ராமானுஜரின் ***ஸ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய கத்யாதிகளில்***, சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை மோக்ஷ காரணமாக விதித்து வெளியிட்ட போதும், அந்த ஆசார்யோத்தமரின் க்ரந்த விரோதமாக, ஸித்தோபாய ப்ரதிபத்தி மட்டுமே மோக்ஷ காரணம் என்று நிர்தேசிக்கிறார்கள் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், என்பதனை முமுக்ஷுபடி க்ரந்தங்களைக் கொண்டு தெளியலாம் :

***இந்நினைவு பிறந்த போதே க்ருதக்ருத்யன்*** (எண் -94) **-** என்றது, 'தனக்கையாக என்னைக் கொள்ள வேணும்' என்னும் இவ்வத்யந்த பாரதந்த்ரிய ப்ரதிபத்தி பிறந்த போதே தன்னுடைய ஹிதத்துக்கு உடலாகச் செய்ய வேண்டுவதெல்லாம் செய்து தலைக் கட்டினவன் என்கை.

வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் ஸ்ரீபாஷ்ய கத்யாதிகளில் சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை விளக்கி இருக்க, ஸாத்யோபாயத்தை நிஷேதித்து விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

# *ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்*

ஸ்வாமி தேசிகன் ***ஸாத்யோபாய சோதன அதிகாரத்தில்*** ,

***இவை அநாதியான அபசார பரம்பரையாலே உத்பன்னமாய் சம்சார ஹேதுவாய்க் கிடக்கிற நிக்ரஹத்தைச் சமிப்பித்துக் கொண்டு உபகரிக்கின்றன***

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

***இவை* -** ஸாத்யோபாயமான பக்தி யோகம் சரணாகதி அனுஷ்டானமாவது

***அநாதியான அபசார பரம்பரையாலே* -** பல பிறவிகளில், சம்சாரி ஜீவர்கள் செய்த சாஸ்த்திர விதிகளை மீறிய செயல்களால்

***உத்பன்னமாய்* -** ஏற்பட்ட

***சம்சார ஹேதுவாய்க் கிடக்கிற* -** துக்கமயமான சம்சார பந்தத்திற்கு காரணமாகிற

***நிக்ரஹத்தைச்* -** பகவானுடைய சீற்றத்தை

***சமிப்பித்துக் கொண்டு* -** களைய

***உபகரிக்கின்றன* -** காரணமாகிறது - அதாவது, ஸித்தோபாயன் சீற்றத்தை கை விட்டு, சம்சாரி ஜீவர்களுக்கு பரம புருஷார்த்தத்தை, ஸாத்யோபாயத்தை எதிர்பார்த்தே அளிக்கிறான்,என்றாகிறது.

(நாளை ஶ்ரீவைகுண்ட கத்யம் தொடரும்)

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

*****

17.1.2023
செவ்வாய் கிழமை

1. பகவத் ராமானுஜரின் ஶ்ரீவைகுண்ட கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 6***

***ததோ பகவதா ஸ்வயமேவ ஆத்மஸஞ்ஜீவநேந அவலோகநேந அவலோக்ய ஸஸ்மிதமாஹூய ஸமஸ்தக்லேசாபஹம் நிரதிசய ஸுகாவஹம் ஆத்மீயம் ஶ்ரீமத்பாதாரவிந்தயுகளம் சிரஸி க்ருதம் த்யாத்வா அம்ருத ஸாகர அந்தர்நிமக்ந: ஸர்வாவயவ: ஸுகமாஸீத***

2. ***சூர்ணிகை பத உரை*** :

# ***ததோ பகவதா ஸ்வயமேவ ஆத்மஸஞ்ஜீவநேந அவலோகநேந அவலோக்ய ஸஸ்மிதமாஹூய* -** இத்தனை காலம் இவன் தன்க்கேயாக இருந்து இப்போது பகவானை வந்தடைந்திருக்கிறான், என மகிழ்ந்து இன்முகம் காண்பிக்கிறான்

# ***ஸமஸ்தக்லேசாபஹம்* -** ப்ராக்ருத துயரங்களை போக்க வல்லது பகவத் திருவடிகளே ஆகும்

# ***நிரதிசய ஸுகாவஹம்ச* -** துக்கமற்ற தன்மையை ஸுகம் எனப் படுவது அல்லாமல் மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத ஸுக ரூபமானது

# ***ஆத்மீயம் ஶ்ரீமத்பாதாரவிந்தயுகளம்* -** திவ்ய தம்பதிகளின் திருவடிகளை பெற்றதனால் உண்டானனது

# ***சிரஸி க்ருதம் த்யாத்வா* -** அந்த திருவடிகளை சிரஸிலே தரித்து நினைத்து

# ***அம்ருத ஸாகர அந்தர்நிமக்ந: ஸர்வாவயவ:* -** அமிர்த கடலிலே மூழ்கி தனது ஸர்வ உறுப்புக்களும் இனிமை பெற்றதாக

# ***ஸுகமாஸீத* -** திவ்ய தம்பதிகளின் திருவடிகளை ஆஸ்ரயித்து முடிவற்ற ஸுகத்தை பரம பதத்தில் அநுபவிப்பவனாவேன்

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

# அந்த நித்ய விபூதியை அடைந்தவர்கள், கர்ம அனுகுணமாக பிறவியை சந்திப்பதில்லை. இதை உபநிஷத் கூறுகிறது : ***ந ச புனராவர்த்ததே ந ச புனராவர்த்ததே***

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, 'ப்ருஹ்ம ஸூத்ரம்' (4-4-6-22)

***அநாவ்ருத்தி சப்தாத் அநாவ்ருத்தி சப்தாத்***

அதாவது,

மோக்ஷத்தை அடைந்தவன் திரும்புவதில்லை. ஆக, *நீங்காத செல்வம்* ஸித்திக்கிறது.

# ஆக, ***ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி*** பெறுவதாவது பரம்பதத்தில் கிடைக்கப் பெறுகிற ***நீங்காத செல்வம்*** என்னவென்றால் :

கண்ணன் கீதையில்,

***ஆப்ரஹ்ம புவனால்லோகா: புநராவர்த்திநோர்ஜுந. மாமுபேத்யது கௌந்தேய புநர்ஜன்ம ந வித்யதே***

என்கிறான்;

அதாவது, 'நான்முகனாகிய ப்ருஹ்மா இருக்கும் லோகம் உட்பட எல்லா லோகங்களும் அழிகின்றனவையே. என்னையே அடைகிறவர்கள் மட்டுமே மறு பிறவியை பெற மாட்டார்கள்' என்கிறான் கண்ணன்.

அழியக்கூடிய உலகங்களில் உள்ள அனுபவங்களும் அழியகூடியவையே, அங்கு உள்ள தேவதைகளும் அழியகூடியவர்களே என்று கண்ணன் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

ப்ருஹ்மா இருக்கும் சத்ய லோகம் வரை அழியகூடியவையே.

அதனால், பலனைக் கருதி இந்த ப்ராக்ருத 14 லோகங்களில் எங்கு சென்றாலும், பாப புண்ய கர்மாக்களின் காரணமாக, மறு பிறவியானது கண்டிப்பாக வந்தே தீரும், என்று வலியுருத்துகிறான் கண்ணன்.

அதனால் கண்ணனை பரமபதத்தில் வந்து அடைபவர்களுக்கே ( மோக்ஷ பலனை பெறுபவர்) மறு பிறவி கண்டிப்பாக கிடையாது என்கிறான் கண்ணன்.

# பராசர மஹரிஷி ஸ்ரீவிஷ்ணு புராணத்தில்,

***கத்வா கத்வா நிவர்தந்தே சந்த்ர ஸூர்யாதயோ க்ரஹா: அத்யாபி ந நிவர்தந்தே த்வாதசாக்ஷர சிந்தகா:***

என்கிறார்.

அதாவது, சந்திரன் சூரியன் போன்ற பல தேவர்களும் ப்ரளயத்தில் தங்கள் பதவிகளை இழந்தவர்களாக இந்த சம்சார லோகத்தை அடைகிறார்கள்.

# ஆனால், எம்பெருமானின் வ்யாபக மந்த்ரத்தை அனுஸந்தித்து ஸ்ரீவைகுண்டத்தை அடைந்த முக்தர்கள் மீண்டும் கர்மாவின் அடிப்படையில் இந்த லோகத்திற்கு திரும்புவதில்லை.

***சீயினால் செறிந்தேறிய புண்மேல் செற்ற லேறிக் குழம்பிருந்து எங்கும், ஈயினால்அரிப் புண்டு மயங்கி எல்லை வாய்ச்சென்று சேர்வதன் முன்னம், வாயினால் நமோ நாரணா வென்று மத்த கத்திடைக் கைகளைக் கூப்பி போயினால் பின்னை இத்திசைக்கு என்றும் பிணைக்கொடுக்கிலும் போகவொட் டாரே***

அதாவது,

பெரியாழ்வார் திருமொழியில் அருளிச்செய்தபடி, 'துக்கமயமான சம்சார கடலில் இருந்து விலகி ஸ்ரீவைகுண்டத்தை அடைந்த தன் அடியாரை, ஜகந்மாதாவான பெரிய பிராட்டியாரையே பிணையாக (ஜாமீனாக) கொடுத்தாலும், கர்ம சம்பந்தமாக சம்சாரத்திற்கு மறுபடி போக விடாமல் காக்கும் எம்பெருமான்'.

4. ஶ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# *ஶ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்* -

வேத மார்க்கமான, மோக்ஷ பலனுக்காக, ஸாத்யோபாயம் அனுஷ்டித்த காரணத்தால், ஸ்வரூப ஆவிர்பாவம் பெற்று இயற்கை நிலையை அடைந்த முக்தாத்மா, அழியாத நித்ய விபூதியிலிருந்து அழியும் லீலா விபூதிக்கு கர்ம வச்யர்களாக வருவதில்லை. ஶ்ரீபாஷ்யத்தில், ஶ்ரீ ராமானுஜர், ***யதி பரம புருஷாயத்தம் முக்தைச்வர்யம் தர்ஹி தஸ்ய ஸ்வதந்த்ரத்வேன தத் சங்கல்பாத் முக்தஸ்ய புநாவ்ருத்தி சம்பவா சங்கேத் யத் ராஹ*** (பரமாத்மா ஸர்வ ஸ்வதந்திரன் ஆன படியாலும், ஜீவர்கள் அவனுக்கு அதீனமானவர்கள் ஆனபாடியாலும், பகவத் ஸங்கல்ப அதீனமாக, முக்தன் பத்தனாக புநாராவர்த்தி உண்டாக ப்ராப்தமோ?) என்று கேள்வி எழுப்பி ***ந ச பரம புருஷஸ் சத்ய சங்கல்ப அத்யர்த்த ப்ரியம் ஞாநினம் லப்த்வா கதாசிதா வர்தயிஷ்யதி*** ( மோக்ஷ உபாயத்தை அனுஷ்டித்த ஞானிகள், பகவானுக்கு ப்ரியமானவர்கள் ஆனபடியால், ஒரு போதும் ஸத்ய ஸங்கல்பனான ஸர்வேஸ்வரன் கர்மானுகுண பிறவியை முக்தனுக்கு அளிக்க மாட்டான்) என்று சாதிக்கிறார்.

# *ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்* -

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்துக்கு வ்யாக்யானமான பகவத் ராமானுஜரின் ***ஶ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய கத்யாதிகளில்***, சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை மோக்ஷ காரணமாக விதித்து வெளியிட்ட போதும், அந்த ஆசார்யோத்தமரின் க்ரந்த விரோதமாக, ஸித்தோபாய ப்ரதிபத்தி மட்டுமே மோக்ஷ காரணம் என்று நிர்தேசிக்கிறார்கள் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், என்பதனை முமுக்ஷூபடி க்ரந்தங்களைக் கொண்டு தெளியலாம் :

***அவனை இவன் பற்றும் பற்று அஹங்கார கர்பம் அவத்யகரம்*** (எண் - 230) - சேதன ப்ரவ்ருத்தி ஸ்வரூப விருத்தம் என்கிற விளக்கம்

இது கைங்கர்ய க்ருத்யங்களிலும் ஸித்திக்குமாகையால், சாஸ்த்திர விரோதம் ; வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் ஶ்ரீபாஷ்ய கத்யாதிகளில் சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை விளக்கி இருக்க, ஸாத்யோபாயத்தை நிஷேதித்து விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

# *ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்*

ஸ்வாமி தேசிகன் ***ஸாத்யோபாய சோதன அதிகாரத்தில்*** ,

***இப்படி அங்க பஞ்சக ஸம்பன்னமான ஆத்ம ரக்ஷா பரந்யாஸமே ப்ரபத்தி சாஸ்த்திரம் எல்லாவற்றிலும் ப்ரதானமான விதேயம் என்று ஶ்ரீவிஷ்ணுசித்த, வாதிஹம்ஸாம்புவாஹ வரதாசார்யாதிகள் ஸங்க்ரஹித்தார்கள்***

என அருளியுள்ளார். இதன் பொருளாவது: சாஸ்த்தர வரிகளின் நோக்கத்தை ஆராயும் போது, ஐந்து அங்கங்களோடு கூடிய, ஆத்ம ஸமர்ப்பணமாகிய சரணாகதி அனுஷ்டானமே, மோக்ஷ ஸாதனமாக சொல்லப் படும் ப்ரமாணங்கள் அனைத்திலும், முக்கியமாக அனுஷ்டிக்க வேண்டிய விதியாக, எங்களாழ்வான் (ஸ்வாமி தேசிகனுக்கு ப்ராசார்ய பரம்பரையில் உள்ளவரும்), ஸ்வாமி தேசிகனின் சாக்ஷாத் ஆசார்யரும், மாதுலனும் (மாமாவும்) ஆன கிடாம்பி அப்புள்ளார், கிடாம்பி அப்புள்ளாரின் சாக்ஷாத் ஆசார்யனான நடாதூர் அம்மாள் - மற்றும் பல ஶ்ரீராமானுஜ க்ரந்த வழி மாறாமல் வந்த ஸதாசார்யர்கள், இவ்விஷயத்தை, அதாவது ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதி அனுஷ்டானமே மோக்ஷ ஸாதநம் என, விளக்கி அறிவுறுத்தினர்.

ஆக, பகவத் கைங்கர்யங்கள், உத்தரக்ருத்யமாக இங்குள்ள காலங்களிலும், பரமபதத்தில் ஸ்வாபாவிகமான சேஷ வ்ருத்தியும், ஸ்வரூப ப்ராப்தம். ஜீவனை ப்ரமாணங்கள் விளக்கும் போது,

*நாயம் தேவோ ந மர்த்யோ வா த்ரியக் ஸ்தாவரோபி வா ஞானானந்த மயஸ்வாத்மா சேஷோஹி பரமாதமன:*

என்கிறது ; அதாவது, இந்த ஜீவன் தேவனல்லன், மனுஷ்யனல்லன், த்ரியக் அல்லன், தாவரமல்லன் ; ஞானம் மற்றும் ஆனந்தத்தை ஸ்வரூபமாக க் கொண்ட இந்த ஜீவன் பரமாத்மாவான எம்பெருமானுக்கு சேஷன் ; சரீர ஆத்ம சம்பந்தம் உடையவன்.

ஆக, கர்ம சம்பந்தமற்ற ஜீவ ஸ்வரூபம் திவ்ய தம்பதிகளிக்கு அஹங்கார மமகாரங்களாகிற குற்றமற்ற பணி செய்து கிடப்பதே ; இது நித்ய விபூதியில் ஜீவர்களுக்கு பூரணமாக ஸித்திக்கிறது.

*ஸ்ரீவைகுண்ட கத்யம் நிறைவு பெற்றது*

*கத்ய த்ரயம் நிறைவு பெற்றது*

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

*****

20.1.2023
வெள்ளி கிழமை

*மறைகளின் மறை என்னும் உரை - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. ஸம்ஸ்க்ருத பத அர்த்தங்களைக் காண்போம்.

# *அஸ்தி* என்கிற ஸம்ஸ்க்ருத பதம் *இருக்கிறது* என பொருள் கொண்டது.

# *நாஸ்தி* (ந அஸ்தி) என்கிற ஸம்ஸ்க்ருத பதம் *இல்லை* என பொருள் கொண்டது.

*ஆஸ்திகன்* என்பவன் தன் புலன்களால் தெளியாத போதும் *இருக்கிறது என உணர்ந்து இருப்பவன்*

*நாஸ்திகன்* என்பவன் தன் புலன்களால் தெளியாத போது *புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்கள் ஏதும் உண்மையில் கிடையாது என்பவன்*

2. ஆக, *ஆஸ்திக்யமாவது* எதை இருக்கிறது என உணர்ந்த நிலை? அதாவது புலன்களால் தெளியாத போதும் எதை நம்ப வேண்டுவதாகிறது ?

தைத்ரீய உபநிஷத், நாராயண ஸுக்தத்தில்

**நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: - நாராயண பரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: - யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருஸ்யதே ஸ்ரூயதேபி வா - அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:***

என்கிறது.

அதாவது, நாராயணனே ப்ரப்ரஹ்மம்! நாராயணனே பரதத்வம்! நாராயணனே மேலான ஜோதி! நாராயணனே பரமாத்மா ! ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே அனைத்துலகையும் வியாபிக்கும் அந்தர்யாமியாகவும் , அதனாலேயே அனைத்துமாகச் சொல்லத்தக்கவனாகவும் இருப்பவன், என்கிறது.

ஆக பரம்பொருளை, உபநிஷத் எனும், ***புலன்களால் தெளியும் ப்ரமாண நூலின் பலத்தினால்*** , அறியலாம்.

அதனால், இறைவனின் இருப்பை நம்புபவன் ***ஆஸ்திகன்*** ஆகமாட்டான் ஏனெனில் இறைவனின் இருப்பை ப்ரமாண பலத்தினால் நம்புகிறான்.

ஆனால் வேத வேதாந்தங்களையே ப்ரமாணமாக, அதாவது நம்பத் தகுந்த ஆதாரமாக, ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு சான்றும் கிடையாது. இருப்பினும், நம் பூர்வர்களின் வழியிலே, வேத வேதாந்தங்களை, சாஸ்த்திர ப்ரமாணமாக, நம்பி ஏற்க இசைபவன் ***ஆஸ்திகன்*** ஆவான்.

ஆக, ப்ரமாணங்களாவது இரு வகை :

# ***சாஸ்த்திர ப்ரமாணம்* -** மறை எனப்படும் வேத வேதாந்தங்களும் மற்றும் உப ப்ருஹ்மணங்களான ஸ்ம்ருதி புராணாதிகளும் மூல ப்ரமாணங்களாம்

# ***ஸம்ப்ரதாய ப்ராமாணம்* -** மூல ப்ரமாணங்களுக்கு விரோதமில்லாமல் அருளிய ஸம்ப்ரதாய ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள்

இவ்வாறு ப்ரமாண வரம்பை இசையாதவன் ***நாஸ்திகன்*** ஆகிறான்.

3. மநு ஸ்ம்ருதியில் கூறப்படுவதாவது,

***ஆர்ஷம் தர்மோபதேசம் வேத சாஸ்த்ரா விரோதிநா யஸ்தர்க்கேண அனுஸந்ததே ஸ தர்ம வேத நேத்ர:***

அதாவது,

வேத வேதாந்தங்களுக்கு விளக்க உரையாக உள்ள க்ரந்தங்களை, அதாவது ஸம்ருதி, புராணம், இதிஹாஸம், ப்ருஹ்ம ஸூத்ரம் போன்றவைகளை, விளக்கும் போது, வேத வேதாந்த வரிகளுக்கு, விரோதம் வராத வகையில் யார் அறிந்து கொள்கிறானோ அவனே தர்ம சாஸ்த்திரம் அறிந்தவன். இவ்விதம் உணராதவன் தர்ம சாஸ்த்திரம் அறிந்தவனாக மாட்டான்.

# மேலும், இதிஹாஸ ஸமுச்சயத்தில், மஹரிஷி,

***ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்***

அதாவது, சாஸ்த்திரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருத்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும்,

என அருளிகிறார்.

4. இதிஹாஸ புராணங்கள், வேத வேதாந்தங்களை விளக்க வந்த உப ப்ருஹ்மணங்களாகும்.

இதிஹாஸங்களான இரண்டும் ஸாத்வீக க்ரந்தங்களாகும். வேத வேதாந்தங்ளோடு ஒத்த கருத்து கொண்டது.

ஆனால், 18 புராணங்களை, 6 ஸாத்வீகம், 6 ராஜஸம் மற்றும் 6 தாமஸம் என்று மூன்று வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன.

ஸாத்வீக புராணங்கள், உயர்ந்த பலனைப் பற்றி, வேத வேதாந்த கருத்துக்களுக்கு முற்றிலுமாக ஒத்த விஷயங்களையே, வெளிப்படுத்தும். அதனால், வைதீக மதங்கள் (வேத வேதாந்தங்களை ஆதாரமாக ஒத்துக் கொண்ட மதங்கள்) இதை ப்ரமாணமாக அங்கீகரிக்கின்றனர்.

ராஜஸ புராணங்கள், தாழ்ந்த பலன்களைப் பற்றி, பலவிதமான அவா, முயற்சி, தொழிலெடுப்பு, அமைதியின்மை, பேராசை என்பதை மிகைப்படுவதிலிருந்து தோன்றுகின்றன. ஆக, அவைகள் வைதீக மதங்களுக்கு (அத்வைத மத்வ மதம் உள்பட) ஏற்புடையதல்ல. அவைகள் மத கொள்ளைகளுக்கு ப்ரமாணங்கள் ஆகாது.

தாமஸ புராணங்கள், உண்மையின்மை, தவறுதல், மயக்கம் இவைகளை மிகைப்படுவதிலிருந்து தோன்றுகின்றன. ஆக, அவைகள் வைதீக மதங்களுக்கு (அத்வைத மத்வ மதம் உள்பட) முற்றிலும் விலக்க வேண்டுவதாகிறது.

# ஸகல உபநிஷத் சாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (4-34)

*__தத் வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஷ்னேன ஸேவயா. உபதேஷ்யந்தி தே ஜ்ஞானம் ஞாநிநஸ் தத்வதர்ஷிந:__*

அதாவது,

ஆத்ம ஞானத்தை பெற விரும்பும் நீ அந்த ஞானத்தை பிழையற உணர்ந்த தத்வ வித்துக்களான பெரியோர்களிடம், ப்ரணாமாதிகளை செய்து பணிவுடன் அடங்கி கேட்டு அறிய வேண்டும்.

# ஸ்வாமி தேசிகன், *__கிடாம்பி அப்புள்ளார் தன்னை கிளியைப் பழக்கி வைக்குமாப் பொலே பழக்கி வைக்க__* என்று சொன்னதையே திருப்பி சொல்லும் கிளிப் பிள்ளையாக தன்னை, ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில், சித்தரிக்கிறார்.

*__தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய் போருகிறது__*

என்கிறார் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில் ஸ்வாமி தேசிகன்.

அதாவது, நம் புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களில், வாதத் திறமையை மட்டுமே கை கொண்டு சாஸத்திரத்திற்கு விரோதமான கருத்துக்களை கூறாமல், சாஸ்த்திரத்தை ஆதாரமாய் கொண்டு விளக்குவதே ஆஸ்திகர்களின் தர்மமாகிறது, என்கிறார்.

5. ஸ்வாமி தேசிகனின் அதிகாரசங்கிரகம் ( 2 - 52 ):

*__மறை உரைக்கும் பொருள் எல்லாம் மெய் என்று ஓர்வார் மன்னிய கூர் மதி உடையார் வண் குணத்தில் குறை உரைக்க நினைவில்லார் குருக்கள் தம் பால் கோதற்ற மனம் பெற்றார் கொள்வார் நன்மை சிறை வளர்க்கும் சில மாந்தர் சங்கேதத்தால் சிதையாத திண் மதியோர் தெரிந்து ஓரார் பொறை நிலத்தின் மிகும் புனிதர் காட்டும் எங்கள் பொன்றாத நன்னெறியில் புகுத்துவாரே__*

அதாவது,

*__வேதார்த்தங்களை நம்பும் ஆஸ்திகர்களும்__* , கூரிய அறிவு படைத்தவர்களும், பிறப்பால் அஸூயை கொள்ளாதவரும், ஆசார்யனிடம் காலக்ஷேபம் செய்து சாஸ்த்திர அர்த்த க்ரஹணம் பண்ணியவரும், *__ஸாரமான விஷயங்களில் ஈடுபட்டிருப்பவரும்__*, சம்சார பலனிற்காக பாமரனின் கட்டுப்பாட்டிற்கு வசப்படாதவரும், அற்ப உலக பலனில் பற்று அற்று இருப்பவரும், பரம ஸாத்வீகர்களான ஸம்ப்ரதாய ஆசார்யர்கள் வழியில் நடந்து உஜ்ஜீவிக்க பெறுவர். ஆக, இந்த ஸத் ஸம்ப்ரதாயம் சாச்வதமாக விளங்கும்.

6. ஆக, சாஸ்த்திரமே கொண்டு, ஆஸ்திகர்களான சம்சாரி ஜீவர்களுக்கு அறிய வேண்டுவதாவது :

# சம்சாரி ஜீவர்கள், ஸகல சாஸ்த்திரங்களையும் கற்று அறிந்து, பிறகு உயர்ந்த பலனுக்கான ஒரு உபாயத்தை அனுஷ்டிக்க இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

*__அனந்த பாரம் பஹுவேதிதவ்யம் அல்பஸ்ச காலோ பஹவஸ்ச விக்னாஹா. யத் ஸார பூதம் ததுபாததீத ஹம்ஸோ யதா க்ஷீர இவாம்புமிஸ்ரம்__*

என்கிற உத்தர கீதை, ப்ரமாணத்தைக் கொண்டு காணும்போது, நமது வாழ்க்கை காலம் மிகக் குறைவானது; அறிய வேண்டுவதோ பலவாக இருக்கின்றன; கற்பதிற்கு தடைகள் ஏராளமாக உள்ளன; அதனால் ஹம்ஸ பறவை தண்ணியிலிருந்து பிரித்து பாலை எடுப்பது போல், பல வித சாஸ்த்திரங்களில் உள்ளதில், சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டு உயர்ந்த பலனை அடைவதற்குறன, தேவையானவற்றை மட்டும் அறிய முயற்சிக்க வேண்டும், என்றாகிறது.

# ஜீவர்கள், துக்கமயமான சம்சாரத்தில் இருந்து விலகி மோக்ஷத்தை அடைய அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஐந்து. அவை,

*__ப்ராப்யஸ்ச ப்ருஹ்மணோ ரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்யுகாத்மநஹா. ப்ராப்தி உபாயம் ஃபலம் சைவ ததா ப்ராப்தி விரோதி ச. வதந்தி ஸகலா வேதாஹா இதிஹாஸ புராணகாஹா__*

என்கிற ஹாரீத ஸம்ஹிதை வரிகள் கொடுக்கும் அர்த்த பஞ்சகம். அதன் விளக்கமாவது:

*__ப்ருஹ்மம்__* **-** பரம் பொருள்

*__சம்சாரி ஜீவர்கள்__* **-** இவ்வுலகில் காணும் மக்கள்

*__உபாயம்__* **-** பலனிற்கான வழி

*__பலன்__* **-** உபாயமளிக்கும் நல் விளைவு

*__விரோதி__* **-** மோக்ஷத்தற்கு தடைகள்

# *__பரமபத சோபானத்தில்__* ஸ்வாமி தேசிகன், ஸ்தூல சரீரம் கொண்ட சம்சாரி ஜீவன் மோக்ஷம் அடையும் படிகளை விளக்குகிறார்.

*__விவேக பர்வா__* **-** பர அவர தத்துவங்களை அததற்கான லக்ஷணங்களால் புரிந்து கொள்வது

*__நிர்வேத பர்வா__* **-** தத்வ விஷய ஞானம் பெற்றவுடன் மனம் தளர்ந்து போவது

*__விரக்தி பர்வா__* **-** சார தமத்தை உணர்ந்து உலக சுகங்களில் ஆசையைத் துறப்பது

*__பீதி பர்வா__* **-** செய்த பாவங்களின் பயனாக வர இருக்கும் நரகாதிகளை எண்ணி அஞ்சுதல்

*__ப்ரஸாதந பர்வா__* **-** மோக்ஷத்தை அடைய, சாஸ்த்திரம் விதித்த, உபாயத்தைச் செய்தல்

*உத்க்ரமண பர்வா* - சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறுதல்

*அர்ச்சிராதி பர்வா* - அர்சசிராதி மார்க்கத்தால் செல்லுதல்

*திவ்யதேச ப்ராப்தி பர்வா* - ஸ்ரீவைகுந்த தேசத்தைச் சேர்தல்

*பராப்த்தி பர்வா* - கைங்கரியங்களைச் செய்துகொண்டு அந்த அனுபவத்திலேயே மூழ்கி இருப்பது.

7. இதனால் உணர வேண்டியது, மறை எனப்படும் வேதங்கள் பல விஷயங்களை மறை முகவாகவே அறிவுறுத்துகிறது ; இதனால் ஒரு ஸதாசார்ய சம்பந்தத்தினாலேயே, அக இருள் நீங்கப் பெற வாயப்பு உண்டாகிறது ; ஆக, சம்சாரி ஜீவர்களுக்கு, *புற இருளினால்* ப்ராக்ருத விஷயங்களில் ஈடுபாடு கொண்டு, பிறவிப் பயனை மறந்து, *அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன்* என்று இருந்து போவதாகிறது ; *அக இருளினால்* ஸர்வ சேஷியான பரதேவதா விஷயத்தில் நிஷ்கர்ஷமின்றி, பிறவியை பலனற்றதாக்குவதாகிறது.

# ஸர்வேஸ்வரன் தத்வ- ஹித - புருஷார்த்த விஷயங்களை பிராட்டிக்கு உபதேசிக்க, பிராட்டியானவள் விஷ்வக்ஸேனருக்கு உபதேசிக்க, அதன் பிறகு ஸ்வாமி நம்ம்ழ்வார் முகேன ஸ்ரீமந் நாதமுனிகள் உபதேசம் பெற, நம் ஸம்ப்ரதாயம் ஓராண் வழி பரம்பரையாக உள்ளது. ஆக, சம்சாரி ஜீவர்களின் ஆத்ம உஜ்ஜீவனத்தில், ஸம்ப்ரதாய ப்ரவர்த்தக ஆசார்யர்களின் பங்கை, சாஸ்த்திரங்கள் உகக்கின்றன.

# முண்டகோகநிஷத்தில்,

*தத் விக்ஞானார்த்தம் ஸ குருமேவ அபிகச்சேத்* மற்றும் *ஆசார்யவான் புருஷோ வேத:*

கூறுவதாவது, 'நல்ல ஆசார்யனைப் பெற்றால் மட்டுமே பரம் பொருளை அறிய முடியும்', என சொல்லப் பட்டிருக்கிறது.

# ப்ரதமாசார்யனான திவ்ய தம்பதிகள் தொடக்கமாக வந்த பகவத் ராமானுஜரின் ஸ்ரீ ஸுக்திகளே அக இருள் நீங்க உபாதேயம் ; இதனை, *ஸ்ரீ ராமானுஜ நூற்றந்தாதியின்* 59வது பாசுரத்தைக் கொண்டு உணரலாம் :

கலி யுகத்தில், அக இருள் மற்றும் புற இருள் அகல, ஸ்ரீ ராமானுஜர் என்கிற ஸதாசார்யனின் திரு நாம உச்சாரணம் ஹேதுவாகிறது என அருளப் பட்டிருக்கிறது.

*கடல் அளவு ஆய திசை எட்டினுள்ளும் கலி இருளே மிடைதரு காலத்து இராமானுசன், மிக்க நான் மறையின் சுடர் ஒளியால் அவ்விருளைத் துரத்திலன் எல் உயிரை உடையவன், நாரணன் என்று அறிவார் இல்லை உற்று உணர்ந்தே*

இது, திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த இராமானுச நூற்றந்தாதி பாசுரம் (நாலாயிர திவ்வியப் பிரபந்தம்).

*கடல் அளவு ஆய திசை எட்டினுள்ளும்* – ஸமுத்ர அளவு எல்லாவிடங்களிலும்

*கலி இருளே மிடைதரு காலத்து* – கலிபுருஷனாகிற அந்தகாரமே நெருங்கிக் கிடந்த காலத்தில்

*இராமாநுசன்* – எம்பெருமானார் (திரு அவதாரம் புரிந்து)

*நால் மறையின்* - நான்கு வேதங்களின்

*மிக்க சுடர் ஒளியால்* – அளவற்ற தேஜஸ்ஸைக் கொண்டு

*அவ்விருளை துரந்திலன் எல்* – அந்த கலிதோஷத்தைப் போக்கியிராமற் போனால்

*உயிரை உடையவன் நாரணன் என்று* – எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷி ஶ்ரீமந் நாராயணனே என்று

*உற்று உணர்ந்து* – யாரும் தெரிந்துகொண்டிருக்கமாட்டார்கள்.

அதாவது, பகவத் ராமானுஜர் என்னும் ஸதாசார்யன் திரு அவதாரம் செய்து, வேதார்த்தங்களை, ஶ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களில், விளங்கக் காட்டாது இருந்திருந்தால், இவ்வுலகம் அனைத்தும், கலி புருஷனால் ஆக்ரமித்து, அக்ஞான மயமாகவே கிடந்திருக்கும்; இருள் தருமா ஞாலத்தில், ஞான ஒளி ஏற்ற, எம்பெருமானார் அவதரித்து எங்கும் வ்யாபித்துக் கிடந்த கலி புருஷனாலான தோஷங்களைத் தொலைத்து வேதச் சுடர் விளக்கேற்றி ***புற இருளை போக்கடிக்கவே*** , எல்லாரும் ஶ்ரீமந் நாராயணனே ஸர்வசேஷி என்கிற பரம விஷயத்தை தெளிந்து ***அக இருளும் களையப் பெற்று*** உய்வு பெறலாமாயிற்று என்றார்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

20.1.2023
வெள்ளி கிழமை

***பகவான் ஆதியிலே ஹிதம் செய்வித்தான் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. கர்ம வச்யரான சம்சாரி ஜீவர்கள் உலக ஸுகங்களை பரம புருஷார்த்தமாக நினைத்து இருக்கும் போது, பகவத் ஆசார்ய கடாக்ஷம் பரம புருஷார்த்தத்துக்கு ஹேதுவாகும் என்கிறபடி.

# ஐந்தாவது வேதமாகக் கொண்டாட்ப் படும் மஹாபாரதத்தில், வேதவ்யாஸ மஹரிஷி அருளும் போது,

***ஜாயமானம் ஹி புருஷம் யம் பஷ்யேன் மதுஸூதந: ஸாத்விக்ஸ்து விக்ஞேய: ஸவை மோக்ஷார்த்த சிந்தக: பஷ்யத்யேநம் ஜாயமானம் ப்ருஹ்மா ருத்ரௌ அதவா புந: ரஜஸா தமஸா சாஸ்ய மானஸம் ஸம்பிப்லுதம்***

அதாவது,

எந்த குழந்தை பிறக்கும் போது ஸர்வேஸ்வரனான மதுஸூதனனால் கடாக்ஷிக்கப் படுகிறானோ, அவன் ஸாத்வீக குணத்தோடு இருந்து கொண்டு மோக்ஷத்திற்கான எண்ணம் கொண்டவனாக இருப்பான். ஆனால், எந்த குழந்தை பிறக்கும் போது ப்ருஹ்மா ருத்ரன் போன்றவர்களால் கடாக்ஷிக்கப் படுகிறானோ, அவன் ரஜோ தமோ குணங்களோடு இருந்து கொண்டு மோக்ஷத்திற்கான எண்ணம் இல்லாமல், அழியக்கூடிய உலக வாழ்க்கையில் அதிக ஈடுபாடு கொண்டவனாக இருப்பான், என்கிறார்.

# ஆசார்ய சம்பந்தம் மோக்ஷ உபாயத்திற்கு காரணம், என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

***ஈஸ்வரஸ்ய ச ஸௌஹார்த்தம், யத்ருச்சா ஸுஹ்ருதம் ததா, விஷ்ணோ: கடாக்ஷம், அத்வேஷம், ஆபிமுக்யம் ச ஸாத்விக: ஸம்பாஷணம், ஷடேதாநி: ஆசார்ய ப்ராப்தி ஹேதவ:***

என்ற ப்ரமாணத்தைக் கொண்டு, ஸ்வாமி ஶ்ரீ தேசிகன் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் உபோத்காத அதிகாரத்தில் அருளிச் செய்தார். அதாவது இயற்கையிலேயே ஜீவர்களிடம் கருணை கொண்ட எம்பெருமான், அவனை நல் வழி படுத்த ஒரு ஸதாசார்யனை அடைவிக்க, தருணத்தை எதிர் பார்த்து காத்திருக்கிறான் என பொருளாகிறது. அதில் முக்கியமாக, ஸஹேதுக கருணைக்கு (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை) காணமான ***யத்ருச்சா ஸுஹ்ருதம்*** அந்த ஜீவர் பக்கலிலே காண காத்திருக்கிறான்.

# ஆசார்யன் செய்யும் உபகாரம், சாண்டிலி ஸம்ருதியில்,

*வ்ருத்தைவ பவதோ யாதா பூயஸி ஜன்ம ஸந்ததி: தஸ்யாமன்யதாம் ஜன்ம ஸந்சின்தய சரணம் வ்ரஜ:*

என்பதால் தெளிவாகிறது ; அதாவது,  நீர் அநேக ஜன்மங்களை வீணாக கழித்து விட்டீர். ஸர்வேஸ்வரனான எம்பெருமானிடத்தில் சரணாகதி அனுஷ்டானம் செய், என மந்த விச்வாசமுடைய தேவலரை சாண்டில்ய மஹரிஷி பணித்தார்.

2. பரமாத்மாவான பகவானுக்கும் ஜீவர்களுக்கும் நவ வித சம்பந்தங்கள் உண்டு என்பதை ப்ரமாண பலத்தினால் தெளியலாம்; இந்த சம்பந்தங்கள் உபமானம் காட்டி விளக்கப் படுகிறது.

*பிதா ச ரக்ஷக: சேஷி பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி, ஸ்வாமி ஆதாரோ மம அத்மா ச போக்தா சாத்யமநூதித:*

என்கிற ஸ்லோகம் கொண்டு விஷயீகரிக்கலாம்.

# *பிதா-புத்ரன்* - பகவானே ஸர்வ காரணபூதன்.

கஜேந்திரன், முதலையின் பிடியிலிருந்து தப்பிக்க,

*நமோஸ்துதே அகில காரணாய; நிஷ்காரணாய; அத்புத காரணாய*

எனக்கூறி, எம்பெருமானை அழைத்தான். அதாவது, எவன் லோகங்கள் அனைத்துக்கும் காரணமோ, எவன் ஒருவன் இருப்பிற்கு எந்த காரணமும் கிடையாதோ, லோகங்களில் காணப்படும் அனைத்து அத்புத விஷயங்களுக்கும் எவன் காரணமோ, அவனை சரணமாக பற்றுகிறேன்.

# *ரக்ஷகன்-ரக்ஷிய வஸ்துக்கள்* - பகவானே ஸர்வ ரக்ஷகன்

ப்ரணவத்தில் அகார வாச்யனான எம்ப்ருமானின், *அவ ரக்ஷணே* எனும் தாதுவினால் அறியப்படும் ரக்ஷகத்வத்தை, *நிர்ஹேதுக க்ருபா விஷயம்* , என  ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் *மூல மந்த்ராதிகாரத்தில்* உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

*இந்த ரக்ஷகத்வம் அவச்சேதகமில்லாமையாலே ஸர்வ விஷயம். ரக்ஷா ப்ரகாரங்கள் விஷயங்கள் தோறும் ப்ரமாணங்கள் காட்டினபடியிலே விசித்திரங்களாயிருக்கும்*

# *சேஷி சேஷ பாவம்* - பகவானே ஸர்வ சேஷி

வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீ ராமானுஜர்,

*பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி*

என்று 'சேஷ - சேஷி' விஷயத்தை விளக்கி அருளியுள்ளார். அதாவது, 'சேஷன்' - தன் செயலினால் சேஷிக்கு உகப்பை ஏற்படுத்துபவன் ; 'சேஷி' - சேஷனின் செயலினால் உகப்பை அடைபவன் ; ஸர்வேஸ்வரனுக்கு போக ரஸத்தை நித்ய முக்தர்கள் உண்டு பண்ண, லீலா ரஸத்தை உண்டு பண்ணுபவர்கள் சம்சாரி ஜீவர்கள். ஆக, அவன் ஸர்வ சேஷி.

# *கணவன்-மனைவி உபமானம்* - பகவானே ஸர்வ நியந்தா

ஸ்ரீ ராம தூதனாக வந்த சிறிய திருவடியிடம், பிராட்டி கூறியதாவது,

*கௌசல்யா லோக பர்தாரம் ஸுஷுவே யம் மனஸ்வினி தம் மமார்த்தம் ஸுகம் ப்ருச்ச சிரஸா ச அபிவாதயா*

கோசலை நந்தனான லோக பர்தாவான ஶ்ரீராமனிடம் என்னுடைய நமஸ்காரங்களைத் தெரிவி.

# *அறிய வேண்டுபவன்- அறிபவன் பற்றிய விளக்கம்*

*அதாதோ ப்ருஹ்ம ஜிக்ஞாஸா* என்கிற ப்ருஹ்ம ஸூத்ரமானது கர்ம விசாரானந்தரம் ப்ருஹ்மத்தைக் குறித்த ஆய்வு சரியானதே ; அவனே அறிய வேண்டுபவன், என்றாகிறது.

# *ஸ்வாமி- தாஸ பாவம்* - பகவானே ஸர்வ ஸ்வாமி

கடோபநிஷத் கூறும் போது,

*அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேண உவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்*

என்று *அ* என்பதால், விஷ்ணு சொல்லப் படுகிறான்; *உ* பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு *ம* என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கம், எனப் பொருளாகிறது.

# *ஆதார-ஆதேய விளக்கம்* - பகவானே ஸர்வ ஆதாரன்

நாராயணன், தத் புருஷ சமாஸத்தினால் *நாராணாம் அயனம்* - அதாவது ஸகல சேதன அசேதன வஸ்துக்களும் இருப்பிடமாகக் கொண்டவன்; ஆக, நாராயண் *ஆதாரம்* ; மற்றவை *ஆதேயம்*

# *சரீரி சரீர சம்பந்தம்* - பகவானே பரமாத்மா

தைத்ரிய உபநிஷத்தில், *நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:* என்றும், ப்ருஹதாரண்யக உபநிஷத்தில், *யஸ்ய ஆத்மா சரீரம்* - ஜீவர்களை நாராயணனுக்கு சரீரம் - என்றும் சொல்லப்படுகிறது.

# *போக்தா-போக்ய விளக்கம்* - பகவானே ஸர்வ போக்தா

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸூத்ரம் *லோகவத்து லீலா கைவல்யம்* என்கிறது. அதாவது, ஸ்ருஷ்ட்டி முதலியவை எம்பெருமானுக்கு விளையாட்டே ப்ரயோஜனம் ; பரமபதத்தில் போக ரஸத்தையும், ப்ராக்ருத லோகங்களில் லீலா ரஸத்தையும் அனுபவிக்கிற போக்தா எம்பெருமான்.

ஆக, பகவத் உறவு ஒழிக்க ஒழியாது ; இதை உணராத போது *பொய் நின்ற ஞானம்* என்பதாகிறது.

3. இவ்வாறு, சம்சாரி ஜீவர்களிடம் பிரிக்க முடியாத சம்பந்தம் கொண்டுள்ள ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன், இந்த ஜீவர்களிடம் மிகுந்த கருணை கொண்டவனாக, சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

அதாவது, அவனது க்ருபை (கருணை) இருவிதம்:

*நிர்ஹேதுக க்ருபை* (காரணம் இல்லாமல் வரும் கருணை)

*ஸஹேதுக க்ருபை* (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை)

ஆனால் இந்த இரண்டு க்ருபைகளுக்கும் உள்ள விஷயங்கள் வேறுபட்டிருக்கின்றன :

அதாவது,

# *நிர்ஹேதுக க்ருபை* (காரணம் இல்லாமல் வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது -

ஆத்மாவை நித்யமாக வைத்திருத்தல், அவனது ஞானத்தை நித்யமாக வைத்திருத்தல், ப்ரளய தசையில் அசித் துல்யமாக இருந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் சரீரத்தையும் புலன்களையும் கொடுக்க ஸங்கல்பித்தல், இந்த ப்ரபஞ்சத்தை உண்டாக்குதல், சம்சாரி ஜீவர்களின் நலனுக்காக சாஸ்த்திரத்தை வெளியிடுதல், அந்த சாஸ்த்திரத்தில் எளிமையான மோக்ஷ வழியை அமைத்துக் கொடுத்தல், முக்தரை ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மீண்டும் சம்சாரதிதிற்கு அனுப்பாமல் இருத்தல் போன்றவைகள் எம்பெருமானுக்கே உள்ள, ஜீவர்களிடம் எதையும் எதிர் பார்க்காத, ஒரு கருணையின் காரியம்.

# *ஸஹேதுக க்ருபை* (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது -

ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரத்தில் விதித்த கார்யங்களை செய்து போகின்ற சம்சாரி ஜீவர்கள் பக்கலிலே உண்டாகும் கருணை. அதாவது, ஸஹேதுக க்ருபைக்கு காரணமாவது, அவனால் சாஸ்த்திரத்தில் சொல்லப் பட்ட, விதி (செய்ய வேண்டுவன) மற்றும் நிஷேத (செய்யக் கூடாதவன) என்கிற பாகுபாடு, பயன் உள்ளதாக இருப்பதற்கு.

# ஆக, *மோக்ஷயிஷ்யாமி* என கண்ணன் அருளியது, *நிர்ஹேதுக க்ருபையால்* மோக்ஷ காரணமாக, ஒரு லகு உபாயத்தை விதித்து, பரம காருணிகனான எம்பெருமான், அம்முகத்தாலே, பல கோடி ஜந்மாக்களை பெற வழியாக்கும் கர்மாக்களை, தன் *ஸஹேதுக க்ருபையாலே* சரணாகதன் விஷயத்தில் களைகிறான், என்றபடி.இதனை சாஸ்த்திரம் கொண்டு அறிய வேண்டும்.

# பாஞ்சர்த்ர சாஸ்த்திரமானது,

*ஸர்வக்ஞோபி விச்வேச: ஸதா காருணகோபி ஸந். ஸம்ஸார தந்திர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே*

என்கிறது; அதாவது, கருணை உள்ளம் கொண்ட ஸர்வக்ஞனான எம்பெருமான், இந்த சம்சாரத்தை நடத்தும் பொருட்டு, சாஸ்த்திர விதிப்படி, சம்சாரி ஜீவர்களிடம் ரக்ஷண ப்ரார்த்தனையை, எதிர் பார்த்து பலனளிக்க காத்திருக்கிறான்.

4. ஆக, ஜகத் வ்யாபாரமாவது, பாபிஷ்டர்களை தண்டித்து திருத்துவதும், ஆஸ்ருதர்களை ரக்ஷிப்பதும் ஆகும்.

# உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய ‘ப்ருஹ்ம ஸூத்ரம்’ (2ம் அத்யாயம் 1ம் பாதம் 10வது அதிகரணம் 33ம் ஸூத்ரம் )

*லோகவத்து லீலா கைவல்யம்*

அதாவது,

ஸ்ருஷ்ட்டி முதலியவை எம்பெருமானுக்கு விளையாட்டே ப்ரயோஜனம் ;

இந்த ஸூத்ரம் ப்ரயோஜனத்வாதிகரணத்தில் இடம் பெறுகிறது. இங்கு விளக்கப்படுவது ஸ்ரீமந் நாராயணன் செய்யும் ஜகத் ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனம். ஸ்ரீமந் நாராயணன் இந்த லோகங்களை உண்டாக்குவதும் அழிப்பதும் விளையாட்டாக செய்து போகிறான் என்கிறது இந்த ஸூத்ரம். இதையே ஜகத் ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனமாகச் சொல்லப் படுகிறது.

# *உதாரணமாக*, ஒரு உயர் காவல் துறை அதிகாரி பதவி வகிக்கும் இடத்தில்,

‘குற்றமே நடப்பதில்லை’

என கொள்வதில் அவன் பெருமை அடைகிறான்.

‘குற்றம் புரிபவர்கள் கண்டிப்பாக தண்டனை அடைவார்கள்’

என கொள்வதிலும் அவன் பெருமை அடைகிறான். ஆனால், அவன் மக்கள் குற்றம் புரியாமல் இருப்பதையே விரும்புவான்.

அது போல, ஸர்வேஸ்வரன், ‘குற்றமே நடப்பதில்லை’ என்கிற நிலையில் உள்ள நித்ய விபூதியாலும் உகப்பை அடைகிறான்; ‘குற்றம் புரிபவர்கள் கண்டிப்பாக தண்டனை அடைவார்கள்’ என்கிற நிலையில் உள்ள லீலா விபூதியாலும் உகப்பை அடைகிறான், என்பதே தாத்பர்யம்.

இந்த சம்சாரி ஜீவர்கள், நித்ய விபூதியில் இருந்து அவனுக்கு உகப்பை அளித்தால், இந்த ஜீவனும் *வித்வான் புண்யபாபே விதூய நிரஞ்சன: பரமம் ஸாம்யம் உபயிதி* என்கிற முண்கோபநிஷத் வரி ப்ரகாரத்தில், பகவானுக்கு துல்யமான ஸுகம் பெறுவான்; லீலா விபூதியில் இருந்து அவனுக்கு உகப்பை அளித்தால், இந்த ஜீவன் துக்கத்தையே சந்திப்பான்.

ஆனால், ஸர்வேஸ்வரன் சம்சாரி ஜீவர்கள் நித்ய விபூதியை அடைவதையே விரும்புகிறான். அதனால் சாஸ்த்திரத்தில் லகு உபாயமான சரணாகதி அனுஷ்டானத்தை விதித்திருக்கிறான்.

5. இப்படிப் பட்ட கர்ம அநுகுண பல ப்ரதனான ஸர்வேஸ்வரன், ஜீவர்கள் நித்யர்கள் துல்யமான ஆனந்தத்தை பெற வேண்டும் என்றே அபேக்ஷிக்கிறான் ; ஆனால், சம்சாரி ஜீவர்கள் ப்ரக்ருதி சம்பந்தத்தினால், அவனை விட்டு விலகி போவதைக் கண்டு அவன் துயரப் படுகிறான் :

# சம்சார பந்தத்தை விளக்கும் போது, ஸ்வாமி தேசிகன் *உபோத்காதாதிகாரத்தில்*

*கர்ம அவித்யாதி சக்ரே ப்ரதிபுருஷம் இஹ அநாதி சித்ர ப்ரவாஹே தத் தத் காலே விபக்தி: பவதி ஹி விவிதா ஸர்வ ஸித்தாந்த ஸித்தா*

என அருளினார். அதாவது, அந்தந்த உரிய காலங்களில், அநாதியாக கர்ம-அவித்யா-வாசனை-ருசி-ப்ரக்ருதி சம்பந்தம்  என்கிற சக்ரத்தில், ஒரு வட்ட வடிவத்தில், சுழன்று இருக்கும் சம்சாரி ஜீவன்களுக்கு, அவரவர்கள் கர்ம வினைக்கு ஏற்ப பலன்கள் பலவாறாக வருகின்றன. இந்த சம்சாரி ஜீவர்களின். கர்ம அனுகுணமான பிறப்புக்களுக்கு, தொடர்பு உண்டு என்பது ப்ரமாண ஸித்தம்.

*அவித்யை* - சரீரத்தையே ஆத்மாவாகவும், ஆத்மாவை சுதந்திரனாகவும் நினைத்தல் போன்ற உண்மைக்கு மாறான எண்ணங்கள்.

*கர்மம்* - அவித்ய்யையால் ஜீவன் செய்யும் சாஸ்த்திரத்தை மீறிய செயல்கள்.

*வாஸனை* - அவித்யா மற்றும் கர்மம் காரணமாக ஜீவனுக்கு உண்டாகும் ஸம்ஸ்காரம் (தன்மை).

*ருசி* - வாஸனைக்கு ஏற்ப உண்டாகும் செயலில் விருப்பம்.

*ப்ரக்ருதி சம்பந்தம்* - மேலுள்ள நான்கு காரணங்களினால் உண்டாகும் ப்ராக்குத சரீர சம்பந்தம்.

இந்த சரீர சம்பத்தினால் மீண்டும் அவித்யை, கர்மம், வாஸனை, ருசி மற்றும் ப்ரக்ருதி சம்பந்தம். அதுவே மீண்டும் மீண்டும் ஏற்படும் பிறவி. இதையே பிறவிப் பிணி என்கிறோம். இச்சுழலே மோக்ஷ பலனுக்கு தடையாகிறது.

# கர்ம மீமாம்ஸை வரி :

*சாஸ்த்திர பலம் ப்ரயோக்தரி*

அதாவது, சாஸ்த்திரம் விதித்த கர்மாக்களை அனுஷ்டிப்பவனுக்கே அதற்காக சொல்லப் படுகிற பாப புண்ய பலன்கள் ஸித்திக்கும். அதாவது, சாஸத்திர விதிகளை மீறும் போது பாபங்களும், சாஸ்த்திர விதிகளை பின்பற்றும் போது புண்யங்களும் ஸித்திக்கும்

*ந புக்தம் க்ஷீயதே கர்ம கல்ப கோடி ஸதைரபி*

என்கிற சாஸ்த்திர விதிப்படி, கல்ப கோடி காலங்களானாலும், பாப புண்ய கர்மாக்கள் அனுபவியாமல் அழியாது.

ஆகையால், சரணாகதனுக்கு விலக்கப் பட்ட பாப புண்ய கர்மாக்களை அவர்கள் மோக்ஷத்தை அடையும் சமயத்தில், ஸர்வேஸ்வரன் அவர்களது புண்ய கர்மாக்களை அவர்களது நண்பர்களிடமும் பாப கர்மாக்களை அவர்களது விரோதிகளிடமும் சேர்த்து விடுகிறான் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

# ப்ரதம ப்ரவ்ருதியில் உள்ள ஸ்வாதந்த்ரியத்தால், ***வ்யபார அர்ஹன்*** என்கிற எண்ணம் கொண்டு, சம்சாரி ஜீவர்கள் சாஸ்த்திர விரோத ***விதி மீறலில்*** ஈடுபட்டு, சம்சார பந்த ஹேதுவான ***கர்ம அனுகுணமான ஸுக துக்க விதிப் பலன்களுக்கு*** வழி வகுத்துக் கொள்கின்றனர் ; இந்த ப்ரக்ருதி அனுபவத்தை, உபநிஷத்,

***பிபந்த்யேநாம் அவிஷமாம் அவிக்ஞாதா: குமாரகா: ஏகஸ்து பிபதே தேவ: ஸ்வச்சந்த:***

கூறுகிறது.

அதாவது,

பரமபத நாதனுடைய குமாரர்களான சம்சாரி ஜீவர்கள், அறியாமையால் மூலப்ரக்ருதியை அனுபவிக்கின்றனர்.

# ***நிர்ஹேதுக க்ருபை*** கொண்ட ஸர்வேஸ்வரன், ப்ரபஞ்சத்தை உண்டாக்கி, கர்ம அனுகுணமாக சம்சாரி ஜீவர்களுக்கு சரீரத்தைக் கொடுத்து, சாஸ்த்திரங்களைக் கொடுத்து, அதில் ***ஸஹேதுக க்ருபையால்*** லகு உபாயமாக சரணாகதி அனுஷ்டானத்தை அகிஞ்சனனுக்கு விதித்து, ஆசார்ய சீலர்களைத் தந்து, மோக்ஷத்தை இஜ்ஜீவர்கள் அடைய வழி செய்து, ***க்ருஷி வலம்தினோதி*** என்று காத்துக் கிடக்கிறான், என்பதை, பல ரிஷிகளும், ஸகலரும் உஜ்ஜீவிக்க விளக்குகின்றனர்.

# ஆக, அவனது நிர்ஹேதுக க்ருபைக்கு விஷயமான ஸகல ஜீவர்களையும் நித்யமாக வைத்தல், சம்சாரி ஜீவர்களுக்கு சரீர இந்த்ரியங்களைக் கொடுத்தல், சாஸத்திரத்தை கொடுத்தருளுதல், பரம புருஷார்த்த பலன் பெறுவதுற்காக, அகிஞ்சனனான சம்சாரி ஜீவர்களுக்கு, லகு உபாயத்தை விதித்தல் ஆகியவற்றால், பகவான் ஆதியிலே ஹிதம் செய்வித்தான், என்றபடி.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

21.1.2023
சனி கிழமை

*பரித்யைஜ்ய என்பது பக்தி யோக விடுகை எவ்வாறு ஸ்த்ரீகளுக்கு பொருந்தும்? - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா*

1. சரமஸ்லோகத்தில் உள்ள ***ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய*** மற்றும் ***சரணம் வ்ரஜ*** என்கிற பதங்கள் ஸாத்யோபாய நிஷேதம் என்கின்றனர் ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள்.

பூர்வபக்ஷிகளின் க்ரந்தமான முமுக்ஷுபடி - எண் 198 :

***இவற்றை தர்மம் என்கிறது ( கர்ம யோகம் தொடக்கமான உபாயங்களை) ப்ரமித்த அர்ஜுனன் கருத்தாலே - பகவத் அத்யந்த பாரதந்த்ரியமாகிற உத்தேச்யத்துக்கு விரோதியாய் இருகையாலே அதர்ம சப்த வாச்யங்களாக ப்ராப்தங்களா இருக்கிற இவற்றை தர்மம் என்று சொல்லுகிறது, ஸ்வ தர்மமான யுத்தத்தை அதர்ம மென்றும் இவற்றை தர்ம மென்றும் ப்ரமித்த அர்ஜுன்னுடைய நினைவாலே இத்தனை.***

ஆக, சரமஸ்லோகத்தில் உள்ள ***ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய*** என்பது அர்ஜுனனுக்கு எற்பட்ட செருக்கை அடக்க, உபாயம் அல்லாத பக்தி யோகத்தை விளக்கி, அதன் விடுகையை ஸர்வேஸ்வரனான கண்ணன் உபதேசித்தான், என்பது பூர்வபக்ஷிகளின் விளக்கம்.

பூர்வபக்ஷிகளின் க்ரந்தமான வசனபூஷணம் - எண் 62 -

***ஆபத்தைப் போக்கிக் கொள்கிறோம் என்று ப்ரமித்து அத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே வேண்டுவது. அதாவது, எம்பெருமான் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணி சம்சாரமாகிற ஆபத்தை போக்கிக் கொள்கிறோம் என்று தான் பண்ணிகிற ப்ரபத்தியாலே தன் ஆபத்தை போக்கிக் கொள்வதாக ப்ரமித்து ஸ்வரூப நாசமிகிற ஆபத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே இவன் செய்ய வேண்டுவது. ஓர் ஆபத்தை பரிஹரித்துக் கொள்ள முயன்று மற்றோர் ஆபத்தை விளைத்துக் கொள்ளாதே இவன் ஸ்வ யத்னத்தில் நின்றும் விலகி இருக்கவே எம்பெருமான் தானே ரக்ஷிக்குமென்று கருத்து***

சரமஸ்லோகத்தில், ***ஸித்தாந்த ஏகதேசிகளின் பூர்வ பக்ஷம்*** :

# ***ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய*** என்பதால், சாஸ்த்திரத்தில் விதித்திருக்கிற அனைத்து கர்தவ்ய செயல்களையும் விடுத்து; அதாவது நித்ய நைமித்திக கர்மாக்களை நியமேன செய்ய தேவை இல்லை, என்பது பத உரையாகிறது.

கண்ணன், அர்ஜுனனுக்கு ஏற்பட்ட செருக்கை அடக்க, இந்த பக்தி யோக விளக்கங்களால் மதி மயக்கத்தை உண்டு பண்ணி, பிறகு அவனுக்கு கர்ம, ஞான மற்றும் பக்தி யோகங்களின் செயல்களை செய்யத் தகாதது என விளக்கி கூறுகிறான்.

# பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் ***சரணம் வ்ரஜ*** என்கிற பதங்களைக் கொண்டு, ஸித்தோபாயமான ஸர்வேஸ்வரன், ஜீவர்கள் மோக்ஷ காரணமாக ஏதும் செய்யாதிருக்க, தான் மட்டுமே மோக்ஷ காரணம் ஆகிறான் என்று ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் வாதிடுவர்.

எம்பெருமான் பலனளிக்க ஸித்தோபாயமாய் இருக்க, சம்சாரி ஜீவர்கள் செய்ய வேண்டிருக்கிற, சரணாகதி அநுஷ்டானத்தைப் பற்றி, ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், கூறுவதாவது,

***ஸம்பந்த ஞான மாத்திரம்*** (எம்பெருமானுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்த ஞானம் மட்டுமே சரணாகதி ஆகும்)

***ஸித்தோபாய ப்ரதிபத்தி மாத்திரம்*** ' (எம்பெருமான் பலனளிக்க ஸித்தமாய் இருப்பதை உணர்வது மட்டுமே சரணாகதி ஆகும்)

***அநிவாரண மாத்திரம்*** ( எம்பெருமான் ரக்ஷிக்கும் போது விலக்காமல் இருப்பது மட்டுமே சரணாகதி ஆகும்)

*அனுமதி மாத்திரம்* ( எம்பெருமான் ரக்ஷணத்தை ஏற்ப்பது மட்டுமே சரணாகதி ஆகும்)

*அசித் வ்யாவ்ருத்தி மாத்திரம்* (சரீர ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்திருப்பது மட்டுமே சரணாகதி ஆகும்)

*சைதன்ய க்ருத்யம்* ( சேதனனின் செயல் மோக்ஷ சாதனமாகாது என அறிந்து கொள்வது மட்டுமே சரணாகதி ஆகும்)

*சித்த ஸமாதானம்* (தன் தன் ருசி அனுகுணமான செயல் மட்டுமே சரணாகதி ஆகும்)

*அதிகாரி விசேஷணமென்று* ( எம்பெருமானிடம் எந்த ஒரு பலனையும் எதிர்பார்க்காமல் இருக்கும் நிலை மட்டுமே சரணாகதி ஆகும்)

என்கிற இவ்வழியிலே பூர்வபக்ஷிகள் அதிவாதம் செய்து மோக்ஷ ஸாதனமான சரணாகதி அநுஷ்டானத்தை நிஷேதிப்பர்.

இது ஸ்ருதி மற்றும் பகவத் ராமானுஜ க்ரந்த ப்ரமாண விரோதம்.

2. இவ்விஷயங்களில், ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதங்களில் உள்ள க்ரந்த விரோத விளக்கங்களைக் காண்போம் :

# *அர்ஜுனனின் செருக்கு என்பது பொருந்தாது* :

அர்ஜுனன் ‘எனக்கு எது நன்மையானதென்று உன்னால் நிச்சயிக்க பட்டதோ, அதை உன் சிஷ்யனாய் உன்னை சரணமடைந்த எனக்கு, கூறி கட்டளையிட வேண்டும்’ என்றல்லவோ மிக பணிவாகக் கேட்டான்; (பகவத் கீதை 2-7)

***கார்பண்ய தோஷோ உபஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாம் தர்ம ஸமூடசேதா:யத் ஸ்ரேய: ஸ்யாத் நிச்சிதம் ப்ரூஹி தந் மே சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்***

கண்ணனிடம், பணிவோடு தர்ம அதர்ம விளக்கத்தை ப்ரார்த்திக்கும் அர்ஜுனனின் செருக்குக்கு இடமில்லை

தார்மிகர்க்குள் தலை சிறந்தவனான பாண்டு புத்திரன் ஆகையாலும், ஸத்வ குணம் மேலோங்கி கீதோபதேசம் கேட்பதாலும், அர்ஜுனன் தெய்வப் பிறவியே என்றும் ‘அவன் வருத்தப்பட வேண்டாம்’ என்றும் கண்ணன் தெளிவு பட முன்பு கூறியிருந்தான்; (பகவத் கீதை 16-5)

***தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயா ஸுரீ மதா. மாசுச: ஸம்பதம் தைவீம் பீஜா தோஸி பாண்டவ***

பணிவோடும் ஸ்ரத்தையோடும் தர்ம விஷயங்களை அறிய அவா கொண்டிருக்கும் நீ தெய்வ பிறவி என்று கண்ணன் உரைக்கும் போது, அர்ஜுனனின் செருக்குக்கு இடமில்லை

இந்த பக்தி யோகம் ஸத்யமானது; மோக்ஷ பலனை நிச்சயமாக கொடுக்க வல்லது; அர்ஜுனனை ஏமாற்றுவதற்காக கூறப்பட்டதல்ல எனவும் உறுதி அளித்திருந்தான் கண்ணன். (பகவத் கீதை 18-65)

***மன் மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ் குரு. மாமே வைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதி ஜானே ப்ரியோஸிமே***

நீ எனக்கு பிரியமானவன் ஆனபடியால், ப்ரதிக்ஞை செய்து மோக்ஷ காரணமான ஸத்யமான பக்தி யோகத்தை விளக்குகிறேன் என்று கண்ணன் கூற, அர்ஜுனனுக்கு ஏற்பட்ட செருக்கை அடக்க இதை கூறியதாக ஏற்க இயலாது.

# இது போல, ஸாத்யோபாய அநுஷ்டானம், மோக்ஷ பலனுக்கான உபாயம், என சாஸத்திர ப்ரமாணங்களான, உபநிஷத், பாஞ்சராத்ர வரிகளும் கூற, அதனை ஆட்சேபிப்பது சாஸ்த்திர விரோதம்.

பிரகதாரண்யக உபநிஷத்தில்,

***ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:***

என்கிறது ; அதாவது மோக்ஷமடைய பரமாத்மாவை, தான் (அகக் கண்ணால்) பார்க்கப்பட வேண்டியது, (அகக் காதால்) கேட்கப்பட வேண்டியது, (உள்)மனதால் நினைக்கப்பட வேண்டியது, (இதய ஐக்கியத்துடன்) பக்தி யோகம் செய்ய வேண்டியது என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

ச்வேதாசுதர உபநிஷத்தில்,

***யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம், யோவை வேதாம்ச ப்ரஹிணோதி தஸ்மை, தகும் ஹ தேவம் ஆத்ம்புத்தி ப்ரகாசம் முமுக்ஷூர்வை சரணமஹம் ப்ரபத்யே***

என்கிறது ; அதாவது, எவனுடைய நாபியிலிருந்து ப்ருஹ்மா உதித்தானோ, எவன் ப்ருஹ்மாவுக்கு வேதத்தை உபதேசித்தானோ, எவன் ஸர்வருக்கும் தத்வ ஞானத்தை தெளிவாக ப்ரகாசிக்க செய்ய வல்லவனோ அவனை மோக்ஷத்தை விரும்புவர்கள் சரணமாக அடைய வேண்டும்.

பாஞ்சர்த்ர சாஸ்த்திரமானது,

***ஸர்வக்ஞோபி விச்வேச: ஸதா காருணகோபி ஸந். சம்சார தந்திர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே***

என்கிறது; அதாவது, கருணை உள்ளம் கொண்ட ஸர்வக்ஞனான எம்பெருமான், இந்த சம்சாரத்தை நடத்தும் பொருட்டு, சாஸ்த்திர விதிப்படி, சம்சாரி ஜீவர்களிடம் ரக்ஷண ப்ரார்த்தனையை, எதிர் பார்த்து பலனளிக்க காத்திருக்கிறான்.

ஆக, எம்பெருமான் ஸித்தோபாயமாய் இருக்க, அவன் தானாகவே ரக்ஷிப்பான் என அர்த்தம் கொண்டால், சாஸ்த்திரங்களில் விதிக்கப்பட்ட *மோக்ஷத்திற்கான பக்தி யோகம் மற்றும் சரணாகதி உபாயங்கள்* அர்த்தமற்றதாகி விடும்.

இதனால், ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில், (18-66)

***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:***

என அருளப் பட்டிருக்கிறது ; அதாவது,

கடினமான பக்தி யோகத்தை செய்ய ஞான சக்தி போன்றவைகளை அற்றவன், அதனால் பக்தி யோகத்தை செய்ய முடியாமல் சோகப் படுகிறவன், பக்தி யோகத்தை விட்டு சுலபமாக, மோக்ஷத்தைப் பெற ஸர்வேஸ்வரனான கண்ணனின் திருவடிகளை பற்றி, ‘சரணாகதி’யை அநுஷ்டிக்கலாம் என்றே தாத்பர்யம்

இதுவே பகவத் கீதையில் ***சரமஸ்லோகம்*** ; இதுவே பகவத் ராமானுஜ ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசம்.

3. சாஸ்த்திர விஷயங்களில், விஷய தாத்பர்யத்தை உணர்ந்து, ப்ரகரணத்துக்கு ஏற்ப செய்யப் படும் சப்தங்களின் அர்த்த நிர்ணயம் :

# மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனையே சரண் புகுந்து அதனால் செய்ய வேண்டிய சரணாகதி அநுஷ்டானத்தை பகவத் கீதையில் (18-66) விளக்குகிறான் கண்ணன்.

***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:***

அதாவது,

'மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் விட்டு இருக்கிற நீ என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

ஆக, ***பரித்யைஜ்ய*** என்பது அனுவாத பக்ஷம்.

# முன்பே இருக்கும் நிலையைக் கூறுவது ***அனுவாத பக்ஷம்*** ; அனுவாதத்தை முன்னிட்டு உள்ள நியமம் ***விதி பக்ஷம்***

அது போல, ***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ*** என்னும் போது,

***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய*** என்பது ***அனுவாத பக்ஷம்*** - மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் விட்டு இருக்கிற நீ - ***கர்ம ஞான பக்தி யோகங்களை அநுஷ்டிக்க முடியாமல் விட்டிருக்கிற நீ*** என்று பொருள்.

***மாம் ஏகம் சரணம் வ்ரஜ*** என்பது ***விதி பக்ஷம்*** - என் ஒருவனையே சரணமாக பற்று - என்னிடம் ப்ரபத்தி அநுஷ்டிக்க வேண்டியது.

# ஸ்வாமி தேசிகனின் ***சரமஸ்லோகாதிகார*** வரிகள் :

***இவ்வனுவாதத்துக்கு அதிகரி விசேஷத்தை காட்டுகை ப்ரயோஜனம்; அதில் பரி என்கிற உபஸர்க்கம் அதிகார பௌஷ்கல்யத்தை விவக்ஷிக்கிறது***

***இவ்வனுவாதத்துக்கு*** - ***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய*** என்கிற ***அனுவாத பக்ஷம்***

***அதிகரி விசேஷத்தை காட்டுகை ப்ரயோஜனம்*** - ஆகிஞ்சன்யம் அதிகாரத்தைக் காட்டுவது உபயோகம்

*அதில் பரி என்கிற உபஸர்க்கம் - இவ்விஷயத்தில் ***பரித்யஜ்ய*** என்பதில் உள்ள ***பரி***

***அதிகார பௌஷ்கல்யத்தை விவக்ஷிக்கிறது*** - சரணாகதிக்கு அதிகாரத்தின் நிறைவையே காட்டுகிறது

இதனால்,***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ*** என்னும் போது, அகிஞ்சனர்களான அதிகாரிகளுக்கு சரணாகதி அநுஷ்டானமே உபாதேயம் என விளக்கப் படுகிறது.

4. ப்ரமாணங்களைக் கொண்டு, ஸ்வாமி நம்மாழ்வார், ஸ்ரீஆளவந்தார், ஸ்ரீராமானுஜர், ஸ்வாமி தேசிகன் போன்ற ஆசார்யோத்தமர்கள், மோக்ஷ காரணமான சரணாகதிக்கு அதிகாரமாவது, ***கார்ப்பண்யம்*** என அருளியுள்ளனர். அதாவது,

***ஆகிஞ்சன்யம்*** (பக்தி யோகம் செய்ய இயலாமை)

***அநன்ய கதித்வம்*** ( ***ப்ரயோஜநான்தர வைமுக்யம்*** - வேறு பலனை நாடாமை; ***தேவதாந்தர வைமுக்யம்*** - வேறு தேவதையை நாடாமை)

என்கின்றனர். இதுவே ***கார்ப்பண்யம்*** எனப் படுவது.

# ஸ்வாமி நம்மாழ்வார், ***புகலொன்றிலா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே*** என ***திருவாய்மொழியில்*** அருளினார்.

# ஸ்ரீ ஆளவந்தார், * **அகிஞ்சனோ அநந்ய கதி சரண்ய: த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே*** என ***ஸ்தோத்ர ரத்னத்தில்*** அருளினார்.

# பகவத் ராமானுஜர், ***அநந்ய சரண: த்வத் பாதார விந்த யுகளம்  சரணமஹம் ப்ரபத்யே*** என ***சரணாகதி கத்யத்தில்*** அருளினார்.

# ஸ்வாமி தேசிகன், ***ந்யாஸ்யாம்ய அகிஞ்சன ஸ்ரீமன் அநுகூலோ அந்வய வர்ஜித விஸ்வாச ப்ரார்த்தநா பூர்வம் ஆத்மரஷா பரம் த்வயி*** என ***ந்யாஸ தசகத்தில்*** அருளினார்.

4. ***கார்ப்பண்யம்*** என்பது சரணாகதி அநுஷ்டானத்திற்காக ***அதிகாரமாகவும்***, அநுஷ்டிக்கும் போது ***அங்கமாகவும்*** இருக்கிறது.

இந்த சரணாகதி அநுஷ்டான முறை எத்தகையது என சாஸத்திரம் கொண்டு தெளியப் புக்கால், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வாக்யப்படி,

***ஆனுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம். ரக்ஷிஷ்யதீதி விச்வாச: கோப்த்ருத்வ வரணம் ததா. ஆத்ம நிக்ஷேப கார்பண்யே ஷட்விதா சரணாகதி:***

என்கிறபடியால்

சரணாகதி அநுஷ்டானத்திற்கு , சாஸ்த்ரத்தில் ஐந்து அங்கங்கள் விதிக்கப் பட்டிருக்கிறது:

***ஆனுகூல்ய ஸங்கல்பம்* -** சாஸ்த்ரத்தில் விதித்த படி நடக்க உறுதி கொள்ளல்

***ப்ராதிகூல்ய வர்ஜனம்* -**  சாஸ்த்ரத்தில் தடுக்கப் பட்டவைகளை செய்யாதிருத்தல் என்ற உறுதி கொள்ளல்

***மஹாவிச்வாசம்* -** ஸர்வேஸ்வரன் மோக்ஷம் அளிப்பான் என்ற நம்பிக்கை

***கார்ப்பண்யம்* -** தான் பக்தி யோகம் செய்ய தகுதி அற்றவன் என்று அனுஸந்தித்தல்

***கோப்த்ருத்வ வரணம்* -** பக்தி யோக ஸ்தாநத்தில் ஸர்வேஸ்வரன் இருந்து பலன் கொடுக்கப் ப்ரார்த்தனை

இந்த அங்கங்களோடு சரணாகதன் தன் ஆத்ம ரக்ஷணத்தை ஸர்வேஸ்வரனிடம் ஸமர்ப்பிக்க வேண்டும். இதுவே ***சரணாகதி அநுஷ்டானம்*** என சாஸ்த்ரங்கள் உரைக்கின்றன. மேலும், இந்த சரணாகதி அநுஷ்டானத்தை ஒரு ஸதாசார்யன் அனுக்ரஹத்தோடு செய்யப் பட வேண்டுமாய் சாஸ்த்ரங்கள் விதிக்கின்றன.

5. வேதவ்யாஸர், மஹாபாரதத்தில்,

***பாஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸனஸ்ய வக்தா நாராயண ஸ்வயம் ஸர்வேஷூ ச ந்ருப் ஸ்ரேஷ்ட ஞாநீனீஷ் வேதேஷூ த்ருஷ்யைதே***

என அருளினார்.

அதாவது, வேத சாரமான பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் தானே அருளினான், என்பதாகிறது. *சாந்தோக்ய உபநிஷத்* ல் நாரதரும் சனகரும் தம்தம் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் ஒரு பகுதியாகிறது, பாஞ்சராத்திரம்.

# இந்த பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தை பகவான் ப்ரஹ்மாவிற்கு உபதேசித்து, பிரம்மாவினால் நாரதருக்கு உபதேசிக்கப்பட்டு, பின்னர் நாரதர் ப்ரவர்த்தகம் செய்தார்.

# பாஞ்சராத்ரமானது *ஏகாயன வேதம்* என்றும் அழைக்கப் பெறுகின்றது. அதாவது, சம்சாரி ஜீவர்களுக்கு இணையற்ற மோக்ஷமாகிற உயர்ந்த பலனை அடைய வழி கூறும் சாஸ்த்திரம் பாஞ்சராத்திரம்.

# ஸ்ரீபாஷ்யம், அவிரோதாத்யாயம், தர்க்க பாதம், *உத்பத்தி அஸம்வ்வாதிகரணத்தில்* , ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்த்திரமும் ப்ரமாணமே, என அறுதியிடுகிறார், ஸ்ரீ ராமானுஜர்.

6. ஆக, சரணாகதிக்கு அதிகாரம் ஆகிஞ்சன்யம் என்பது ப்ரமாண ஸித்தம் :

# அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில்,

*யத்யேன காமகாமேந ந ஸாத்யம் ஸாதாநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேன யோகேந ந ச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேனைவ மஹாமுனே பரமாத்மா ச தேனைவ ஸாத்யதே புருஷோத்தம:*

எனச் சொல்லப் பட்டது.

அதாவது,

தான் விரும்பிய பலனை, எவனால் அதற்கான உபாயத்தைக் கொண்டு அடைய முடியாதோ, முமுக்ஷுவால் எந்த பக்தி யோகத்தை அநுஷ்டித்து மோக்ஷ பலனை பெற முடியாதோ, மஹாமுனியே! அவன் ப்ரபத்தியை அநுஷ்டித்து பலனைப் பெறுகிறான். முமுக்ஷுவானவன் திரும்பி வருதல் இல்லாத புருஷோத்தமனையும் ப்ரபத்தியாலே அடைகிறான்.

# இந்த சாரத்தையே, ஸ்வாமி தேசிகன், *ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்தில்* தெளிவு படுத்தி உள்ளார்.

*ஸுதுஷ்கரேண ஷோசேத்யோ யேன யேன இஷ்ட ஹேதுநா ஸ ஸ தஸ்ய அஹம் ஏவ இதி சரமஸ்லோக ஸங்க்ரஹ:*

அதாவது,

எவன் தன்னால் செய்ய முடியாதாகிய எந்த எந்த இஷ்ட பலத்திற்கு ஸாதநமாகிய உபாயத்தை செய்ய முடியாமல் வருந்துகாறானோ, அவனுக்கு அந்த ஸாதநம் நானே என்பதே சரமஸ்லோகத்தின் திரண்ட பொருள்.

# ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (9-38)

*மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யே அபி ஸ்யு பாப யோனய. ஸ்திரியோ வைச்யாஸ்ததா வேளாளாஸ்தே அபி யாந்தி பராம் கதிம்*

எனப்படுகிறது. அதாவது,

பார்த்த ! அனைத்து வர்ணத்தவரும், ஆண் பெண் வித்யாஸமின்றி, என்னை சரணடைபவர்கள், உயர்ந்த கதியான மோக்ஷத்தை அடைவார்கள், என்கிறான் கண்ணன். அதாவது, பக்தி யோகத்திற்கு தடையான பாபங்கள் உள்ள பக்தி யோகத்துக்கு அதிகாரமற்ற அந்தண பெண்களாயினும், பக்தி யோகத்துக்கு ஜாதி

அதிகாரமுள்ள வைச்யனாயினும், ஜாதி யோக்யதை அற்ற  பக்தி யோக அதிகாரமற்ற வேளாளனாயினும், சரணாகதி அநுஷ்டானத்தால் மோக்ஷம் பெறலாம்.

# அதனால் ***பரித்யைஜ்ய என்கிற பக்தி யோக அநுஷ்டான அநர்ஹதை*** பல காரணங்களால் ஸித்திக்கும்

பக்தி யோகத்தில் ஈடுபடுபவன், அந்த அநுஷ்டானத்திலும், அதில் உள்ள உட்பிரிவுகளிலும், அதனுடைய பலன் விஷயத்திலும் பூரணமான அறிவு உடையவனாக இருக்க வேண்டும். அது இல்லாமல் இருப்பது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தகுதியாகிறது. இதனால் ***ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய - என்பது ஞான பூர்ணத்வம் அற்ற ஆகிஞ்சன்யத்தை குறிப்பதாகும்***

பக்தி யோகத்தில் ஈடுபடுபவன், அந்த அநுஷ்டானத்திற்கு தேவையான செயல்களைச் செய்ய (கர்ம, ஞான, பக்தி யோகத்தைச் செய்ய) சாமர்த்யம் உள்ளவனாக இருக்க வேண்டும். அது இல்லாமல் இருப்பது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தகுதியாகிறது. இதனால் ***ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய - என்பது அநுஷ்டான சக்தி அற்ற ஆகிஞ்சன்யத்தை குறிப்பதாகும்***

பக்தி யோகத்தில் ஈடுபடுபவனின் பலனாவது, கால தாமதத்துடன் (ப்ராரப்த கர்மாவின் முடிவில், அதாவது ஒரு சில பிறவிகளுக்கு பிறகு) கிடைக்க இருப்பதால், அது வரை காத்திருக்க நேரிடும். அது வரையிலான கால தாமதத்தை இசையாது இருப்பது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தகுதியாகிறது. இதனால் ***ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய - என்பது கால தாமதத்தை ஏற்க மாட்டாத ஆகிஞ்சன்யத்தை குறிப்பதாகும்***

பக்தி யோகத்தில் ஈடுபடுபவன், தன்னுடைய தொடக்கத்தில், ப்ராம்மண க்ஷத்ரீய அல்லது வைச்ய வர்ணத்தில் உள்ள ஆணாக இருக்க வேண்டும். அது இல்லாமல் இருப்பது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தகுதியாகிறது. இதனால் ***ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய - என்பது பிறவியினால் ஏற்பட்ட ஆகிஞ்சன்யத்தை குறிப்பதாகும்***

# ஸ்வாமி தேசிகன் ***சரமஸ்லோக அதிகாரத்தில்*** இந்த ஆகிஞ்சன்யத்தை விளக்குகிறார் :

***அல்பக்ஞனாய் அல்ப சக்தியாய் பரிமித காலாவர்த்தியாய் விலம்ப க்ஷமனும் அன்றிக்கே இருக்கிற உன்னாலே அறியவும் அநுஷ்டிக்கவும் அரிதாய்ப் பல விலம்பமும் உண்டாயிருக்க உபாயாந்தங்களில் அலையாதே***

இதன் பொருளாவது:

# ***அல்பக்ஞனாய்*** - ஞான குறைபாடு மிகுந்தவனாக இருக்கும் சம்சாரி ஜீவன்

# ***அல்ப சக்தியாய்*** - அநுஷ்டான சக்தி குறைவாக இருக்கும் சம்சாரி ஜீவன்

# ***பரிமித காலாவர்த்தியாய்*** - பரிபூரண ஆத்ம ஞானத்தை பெற கால அவகாசம் அற்ற சம்சாரி ஜீவன்

# ***விலம்ப க்ஷமனும் அன்றிக்கே*** - சம்சார துக்க விலகலுக்கு கால தாமதத்தை இசையாத சம்சாரி ஜீவன்

# ***இருக்கிற உன்னாலே*** - என்கிற நிலையிலே உள்ள நீ

# ***அறியவும்*** - பூரண ஆத்ம ஞானத்தை பெறவும்

# ***அநுஷ்டிக்கவும்*** - சாஸ்த்திர விதிப் படி மோக்ஷ உபாயமான பக்தி யோகத்தை அநுஷ்டிக்கவும்

# ***அரிதாய்ப்*** - செய்ய முடியாதவனாய்

# ***பல விலம்பமும் உண்டாயிருக்க*** - மோக்ஷ பலன் தாமதமாய் பெறப்படுவதாய் இருக்க

# *உபாயாந்தங்களில் அலையாதே* - அந்த பக்தி யோகத்தை அநுஷ்டிக்க முயற்சிக்காதே (அதாவது, அகிஞ்சனனுக்கு சரணாகதி அநுஷ்டானமே மோக்ஷ ஸாதனம், என்றபடி)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

21.1.2023
சனி கிழமை

***சேறு என்பதற்கு சாஸ்த்ரீய விளக்கம் - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா***

1. பொதுவாக, தண்ணீரும் மண்ணும் கலந்து இருக்கிற நிலையையே நாம் சேறு என்கிற பதம் கொண்டு உபயோகிக்கிறோம் ; உதாரணமாக, மழைக் காலத்தில் பாதைகள் சேறாகி விடுகின்றன ; சேறு என்பதற்கு அகராதியில் உள்ள விளக்கமாவது, ஒரு திரவமும் த்ருடப் பொருளும் கலந்து இருக்கிற கலவையையேக் குறிக்கும் ;

ஆனால் சேறு என்பது விரும்பத் தகாத விஷயமாகவே இருக்கும் ; அதாவது,

'சேறும் சகதியும்' போன்ற ப்ரயோகம் ;

ஒருவர்மீது உள்ள கசப்புணர்வால் அவரைப் பற்றி அவதூறு சொல்லுதல் என்பதனை அவர் என்மீது வேண்டுமென்றே சேற்றை வாரி இறைக்கிறார், எனப் படுகிறது.

பாதங்களில் நிறைய ஈரம் படும்போது விரல் இடுக்குகளில் உண்டாகிற நோய்க்கு ***சேற்றுப் புண்*** என்று பெயர். சில வகைக் கிருமிகள் விரல் இடுக்குகளைத் தாக்குவதால் இது ஏற்படு கிறது. கால் விரல் இடுக்குகளில் சிறு சிறு கொப்புளங்கள் ஏற்படும்.

ஆக, சேறு என்பதாவது ஒரு திரவமும் த்ருடப் பொருளும் கலந்து இருக்கிற கலவையை, தாழ்ந்த விஷயத்தை சித்தரிக்கப் படும் போது உபமானமாக்குவது வழக்கம் ;

ஒரு திரவமும் த்ருடப் பொருளும் கலந்து இருக்கிற கலவையை, உயர்ந்த விஷயத்தை சித்தரிக்கப் படும் போது அது உபயோகப் படுத்தும் பொருளின் பெயரால் உபமானமாக்கப் படும் - கூழ், கஞ்சி, கட்டுமான கலவை (mortar - cement, sand & water)

2. ஸ்வாமி தேசிகனின் ***அபராத பரிஹார அதிகார*** காரிகை :

***ஸ்வச்ச ஸ்வாது சதா அவதாத் ஸூபகாம் தைவாத் அயம் தேஹப்ருத் ; மாலின்ய ப்ரசமாய மாதவ தயா மந்தாகிநீம் விந்ததி ; யதி ஏவம் அபி அஸௌ அசார விஷய ஸ்ரோத: ப்ரஸூதை: புந: ; பங்கை: ஏவ கலங்கயன் நிஜதநும் ப்ராஜ்ஞை: ந சம்ஸ்லிஷ்யதே***

அதாவது,

# ***ஸ்வச்ச ஸ்வாது சதா அவதாத் ஸூபகாம் தைவாத் அயம் தேஹப்ருத்*** ; - சரீர சம்பந்தத்தோடு கூடிய பத்த ஜீவன் ஒரு ஸுஹ்ருத விசேஷத்தால் மேன்மையோடும் போக்யமானதானதுமான பாபத்தை போக்கி இஷ்டத்தை தர வல்லதுமான

# *மாலின்ய ப்ரசமாய மாதவ தயா மந்தாகிநீம் விந்ததி* ; - மோக்ஷ விரோதியான பாபங்கள் நீங்கப் பெற திவ்ய தம்பதிகளின் கங்கை ப்ரவாஹம் போன்ற தயையை உபாயமாக அடைகிறார்கள்

# *யதி ஏவம் அபி அஸௌ அசார விஷய ஸ்ரோத: ப்ரஸூதை: புந:* ; - இப்படி இருந்தும் இந்த ப்ரபன்னன் உலக விஷயமாகிற வெள்ளத்தால் ஏற்பட்ட

# *பங்கை: ஏவ கலங்கயன் நிஜதனும் ப்ராஜ்ஞை: ந சம்ஸ்லிஷ்யதே* - சேறுகளாலே தன் சரீரத்தை அசுத்தப் படுத்திக் கொண்டால் மஹான்கள் இவர்களை புறக்கணிக்கின்றனர்.

ஆக *அசார விஷய ஸ்ரோத: ப்ரஸூதை: புந: பங்கை: ஏவ கலங்கயன் நிஜதனும்* என்னும் போது உலக விஷய சேற்றினால் அசுத்தப் படுத்திக் கொள்வது என்பது விரும்பத் தகாத விஷயமாகவே இருக்கிறது.

ஆக, ஸ்வரூப விருத்த செயல்களுக்கு சேற்றை உதாஹரிக்கப் படுகிறது.

3. கவிஞர்களும் திரைப் படத்தில், சேற்றை ஹேயமாகவை உதாஹரிக்கின்றனர் :

***காற்றினில் பிறந்தவளோ, புதிதாய் கற்பனை வடித்தவளோ, சேற்றினில் மலர்ந்த செந்தாமரையோ, செவ்வந்திப் பூச்சரமோ***

***சேற்றினில் மலர்ந்த செந்தாமரையோ*** - ஹேயத்தில் தோன்றியதன் உயர்வை வர்ணிக்கப் படுகிறது.

4. ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழி (5-7-1)

***நோற்ற நோன்பு இலேன், நுண் அறிவு இலேன், ஆகிலும் இனி உன்னை விட்டு ஒன்றும் ஆற்ற நிற்கின்றிலேன், அரவின் அணை அம்மானே, சேற்றுத் தாமரை செந்நெலூடு மலர் சிரீவர மங்கல நகர் வீற்றிருந்த எந்தாய், உனக்கு, மிகை அல்லேன் அங்கே***

அதாவது,

சாஸ்த்திரம் விதித்த பக்தி யோகத் திற்கு அங்கமான கர்ம யோகம் மற்றும் ஞான யோகம் செய்ய ஞான சக்தி அற்ற என்னை உன்னுடைய ரக்ஷிய வஸ்துவாகக் கருதி ஏற்க வேண்டுவதாய் சரண் புகுகிறபடி.

# *சேற்றுத் தாமரை செந்நெலூடு மலர் சிரீவர மங்கல நகர் வீற்றிருந்த எந்தாய்* - சேற்று நிலங்களிலே செந்நெற் பயிர்களிடையே தாமரைகள் மலரப்பெற்ற வானமாமலைப் பதியிலே இருந்தருளும் எம்பெருமானே!

# *உனக்கு, மிகை அல்லேன் அங்கே* - ஜீவ ரக்ஷணத்தை ஸ்வாபாவிகமாக உடைய உனக்கு, நீ விதித்த லகு உபாயத்தை நான அநுஷ்டிக்க அதற்கு பரம புருஷார்த்தத்தை அளித்து ரக்ஷிப்பது ஒரு போதும் மிகை ஆகாது.

இங்கு சேற்றின் உபமானமானது, அந்த ஹேயமான சேற்றில் தோன்றுகிற தாமரையை உவகையோடு ஸ்வீகராக்கும் எம்பெருமான், ஸர்வ ஜீவர்களிடம் பரம காருணிகனானவன், சம்சார பந்தத்திலிருந்து தான் விதித்த லகு உபாய அநுஷ்டானத்தினால் கரை சேர்ப்பான் என்றபடி.

# ச்வேதாசுதர உபநிஷத்தில்,

***ஸர்வேந்த்ரிய குணாபாஸாம் ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம் ஸர்வஸ்ய ப்ரபுமீசானாம் ஸர்வஸ்தம் சரணம் ஸுக்ருத்***

என்கிறது, அதாவது

கருணைமிக்க ஸர்வேஸ்வரன் அனைவராலும் சரணம் புக ஏற்றவனாக உள்ளான்.

# ஸந்த்குமார ஸம்ஹிதையில்,

***யகுயோ நிஷ்வபி ஸஞ்சாதோ ஸ: ஸக்ருத் சரணம் கத: த மாதா பித்ரு ஹந்தாரம்பி பாதி பவர்திஹா***

என்கிறது, அதாவது

எந்த ஜாதி பிறந்தவராயினும், தாய் தந்தையை கொல்லும் அளவிற்கு தீய குணங்களைக் கொண்டவனாயினும், ஒரு முறை ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனிடத்தில் சரணாகதி அநுஷ்டித்தானேயானால், கருணை உள்ளம் கொண்ட ஸர்வேஸ்வரன், அவனை சம்சார பந்தத்திலிருந்து விடுவித்து மோக்ஷமளிக்கிறான்.

5. ஆண்டாளின் திருப்பாவை :

***கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி நினைத்து முலை வழியே நின்றுபால் சோர நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய் பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச் சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கு இனியானைப் பாடவும்நீ வாய்திறவாய் இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேர்உறக்கம் அனைத்துஇல்லத் தாரும் அறிந்தேலோர் எம்பாவாய் !***

# ***பாசுரம் பொருள்*** :

இளங்கன்றுகளையுடைய எருமைகளானவை கதறிக்கொண்டு கன்றின் மீது இரக்கமுற்று கன்று ஊட்டுவதாக நினைத்து முலை வழியால் இடைவிடாமல் பால் பெருக, வீட்டை ஈரமாக்கி சேறாகப் பண்ணுகையாகிற சிறந்த செல்வத்தை உடையவன் தங்கையானவளே! பனியானது எங்கள் தலையிலே விழும்படி உனது மாளிகையின் வாசலில் அவலம்பித்துக் கொண்டு, சீற்றத்தினால் தென் திசையிலுள்ள லங்காபுரிக்கு அரசனான இராவணனை கொன்றொழித்தவனும் சிந்தனை இனியனுமான இராமபிரானை நாங்கள் பாடவும், நீ வாய்திறந்து பேசுகிறாயில்லை, எங்களாற்றாமையை அறிந்து கொண்ட பின்பாகிலும் எழுந்திரு; இது என்ன ஓயாத தூக்கம்? எல்லா வீட்டுக்காரர்களாலும், நாங்கள் உன் மாளிகை வாசலில் திரண்டு நிற்கிறவிது அறியப்பட்டதாயிற்று

இப்பாசுரத்தின் சாரமான அர்த்தம், பகவத் சம்பந்தம் விச்சேதியாதே இருக்கிற சரணாகதனுக்கு, தத் சம்பந்த சம்பந்திகள் அருளின, சாஸ்த்திர விதிப்படியான அனுஷடான கைங்கர்யம் பண்ணுகை, ஸ்வரூபம் என்கிறது.

# ***நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்*** என்பதனைக் கொண்டு ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம் :

மாடுகள் பாலைச் சுறந்து அங்கு சேறு போல குழம்பி இருக்க, இடையர்களின் தர்மமான, பால் கறப்பதை விட்டு, பகவத் அனுபவத்தில் திளைத்து நிற்கிற கோபியரை, ***நற்செல்வன்*** என போற்றுவது, பகவத் அனுபவத்தில் ஈடுபடும் போது வர்ண ஆஸ்ரம தர்மங்களை மீறுவது குற்றமாகாது எனப் போற்றப் படுகிறது.

# ***நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்*** என்பதனைக் கொண்டு ஸித்தாந்த பக்ஷமான வாதம் :

தாமஸ குணம் (எருமை மாடு உபலக்ஷணம்) மேலோங்கி விபரீத அர்த்தங்களை சேராக பொழியும் போது, பகவத் ஸ்வரூப ஸ்வபாவத்தை நன்கு உணர்ந்த ஸத்வ குணம் மேலோங்கிய பெண்ணே !

ஆக, வர்ண ஆஸ்ரம கர்ம நிஷேதமாக ஆண்டாள் பாசுர விளக்கம் கொள்வது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

******

22.1.2023
ஞாயிறு கிழமை

***ஆத்மா, மனஸ், தர்ம பூத ஞானம் இதன் சம்பந்தம் ஸுக துக்கம், ஸ்தூல ஸூக்ஷ்ம தேஹம், சுஷூப்தி ஸ்வப்ந ஜாக்ருத் தசை - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா***

1. சம்சார பந்த ஹேது :

# ஜீவ ஸ்வரூபத்தை, *தத்வ த்ரய சிந்தனாதிகாரத்தில்* ஸ்வாமி தேசிகன் விளக்கி அருளியுள்ளார் :

***ஆகையால், ஜீவ ஸ்வரூபத்தை ஞானத்வம், ஆனந்தத்வம், அமலத்வம், அணுத்வம் இத்யாதிகளான நிரூபக தர்மங்களையிட்டு நிரூபித்து ஞானம், ஆனந்தம், அமலம் அணு என்று இம்முங்களாலே சொல்லக்கடவது***

ஞானமயனான ஜீவன், தன் ஸ்வரூப ஸ்வபாவங்களை அறியாமல், மோஹித்துக் கிடக்க காரணம் கர்ம அனுகுணமான ப்ராக்ருத சரீர சம்பந்தமே !

# பராசர மஹரிஷி, ஸ்ரீவிஷ்ணு புராணத்தில்

***அநேக ஜன்ம ஸாஹச்ரீம் சம்சார பதவீம் வ்ரஜன். மோஹ ஸ்ரமம் ப்ர்யாதோஸௌ வாஸனா ரேணு குண்டித:***

என அருளினார். அதாவது, அநேகமாயிரம் ஜன்மங்காளக, சம்சாரத்தில் சிக்கி, ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் கலந்த ப்ரக்ருதி என்கிற அசேதன வஸ்துவின் பரிமாணங்களாலான சரீரத்தை பெற்று, மோஹம், அக்ஞானம் போன்ற புழுதிகளால் மூடப்பட்டு, இந்த துக்க மயமான சம்சார வாழ்வே போக்யம் என கருதும் அளவிற்கு 'ப்ரக்ருதியின் சேர்க்கை' ***ஸம்ஸர்கஜா தோஷ குணா பவந்தி*** என்கிற வரிக்கு ஏற்ப, இந்த சம்சாரி ஜீவர்களின் எண்ணத்தையும் செயல்களையும் ஆட் கொள்கின்றன.

பராசர மஹரிஷி, ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் ***ஸர்வம் துக்க மயம் ஜகத்*** என்று உலகில் உள்ள அனைத்து பலன்களும் துக்க கலப்புண்டவையே, என அருளினார்.

# இந்த, ஞானக் குறைப் பட்டின் கொடுமையை, ஸ்ரீராமானுஜர், சரணாகதி கத்யத்தில் தெளிவு படுத்துகிறார்:

***மதீயானாதி கர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம் பகவத் ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஜ்ஞான ஜனனீம் ஸ்வவிஷயாயாஸ்ச போக்த புத்தேர் ஜனனீம் தேஹேந்த்ரியத்வேன போக்யத்வேன சூக்ஷ்மரூபேண சாவஸ்திதாம் தைவீம் குணமயீம் மாயாம்***

அதாவது, இந்தப் ப்ரக்ருதி எனப்படும் முக்குணங்களாலான (ஸத்வம், ரூஸ் மற்றும் தமஸ்), சம்சாரி ஜீவர்களின் சரீரம் இருக்கிறதே , இது அநாதிகாலமாக அடியேன் செய்த கர்மவினை என்கிற ஆற்று வெள்ளத்தில் அடித்துத் தள்ளப்பட்டு பகவானின் ஸ்வரூபத்தை அறியாதபடி செய்கிறது. ஸ்ரீமந்

நாராயணன், பரமன்; அவனுக்கு நாம் நல்லடியார்கள் என்கிற நல்ல எண்ணங்கள் தோன்றாதபடி தடுத்து, அதற்கு எதிரான எண்ணங்களை நினைக்கச் செய்கிறது. ஒரு பொருளை, வேறு ஒரு பொருளாக நினைக்கச் செய்கிறது. தனக்குத் தானே இன்பமானவன் என்கிற எண்ணத்தைத் தோன்றச் செய்கிறது. மாயா வித்யை செய்பவன்,காண்பவரை மயக்க , தன் கையில் மயில்தோகை வைத்திருப்பதைப் போன்று ப்ரக்ருதியானது , சரீரத்தையும் , இந்த்ரியங்களையும் தன்வசம் வைத்து சம்சாரி ஜீவனை மயக்கி அவன் உண்மையை அறியாமல், அவனுக்குத் தவறான அறிவைக்கொடுத்து, புலன் இன்பங்களில் ஈடுபடச் செய்கிறது.

# ஆக, அமலத்வம் உடைய ஜீவனுக்கு தோஷங்களாவது, ப்ரக்ருதி பரிணாமமான, கர்ம க்ருதமான சரீர சம்பந்தத்தினாலேயே உண்டாகிறது

2. சேதனர்கள் அறிவாயும் அறிவு உடையவர்களாயும் இருக்கின்றனர் :

# ஶ்ரீ ஆளவந்தார்,

***தேஹ இந்த்ரிய மந: ப்ராண தீப்ய: அந்ய தேஹம்***

என்று ***ஆத்ம ஸித்தியில்*** அருளிச் செய்தார் ; அதாவது,

ஆத்மாவானது, அசேதன வஸ்துக்களான தேஹம், இந்த்ரியம், மனஸ், ப்ராணன் போன்றவற்றோடு மாறுபட்டது.

# கடோபநிஷத் கூறும் போது,

***அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேண உவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்***

என்று ***அ*** என்பதால், விஷ்ணு சொல்லப் படுகிறான்; ***உ*** பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு ***ம*** என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கம், எனப் பொருளாகிறது.

# தத்வ சாகர ஸம்ஹிதையில் விளக்கப் படுவதாவது :

***ஆத்மா ஸ து மகாரோயம் பஞ்சவிம்ச: ப்ரகீர்த்தித:***

இந்த ***ம*** கார வாச்யனனான ஜீவனை ப்ரமாணம் 25வது தத்வம் என்கிறது.

# மகார வாச்யனான ஜீவ லக்ஷணம் அதனுடைய தாதுக்களால் அறியலாம்:

***ம*** காரத்தின் தாதுக்காளாலே

***மன ஞானே*** - என்பதால் ஞானமாய் இருப்பது

***மன அவபோதனே*** - என்பதால் ஞானத்தை குணமாய் உடையது

***மஸ பரிமாணே*** - என்பதால் அணு ஸ்வரூபன்

என்பதாகும்.

# ***ஞானம்*** என்கிற அறிவு என்பதன் பத விளக்கம் :

*__கஸ்யசித் ப்ரகாசகத்வம்__*, அதாவது தன்னுடையவாகவுமாம் வேறொன்றினுடையவாகவுமாம் ஏதேனுமொன்றினுடைய வ்யவஹார அனுகுண்யத்தை பண்ணுகை. அதாவது, தெளிவு படுத்துகை.

# *__ஞானமாய் இருப்பது__* என்றால் 'தன்னை தான் அறியும் சக்தி உடையது' என பொருள்.

சாஸ்த்ரம் இதை *__தர்மி ஞானம்__* என்கிறது. ஒவ்வொரு ஜீவனும் தன் *__தர்மி ஞானத்தால்__* தன்னைத் தான் எப்போதும் இடைவிடாது அறிகிறான். தூங்கும் காலத்திலும் தன்னை அறிகிறான். அதனால் தான், தூக்க காலத்தில் புலன்கள் அனைத்தும் இயங்காத நிலையிலும், விழித்தவுடன் *__நான் நன்றாக தூங்கினேன்__* என்று உணர முடிகிறது.

இப்படி ஒவ்வொரு ஜீவனும் ஞானமாய் இருக்கிறான். ஆக, *__தர்மி ஞானம்__* சேதனர்களின் இருப்பை, எல்லா காலத்திலும் வேறு ஒரு ஞானத்தின் அபேக்ஷை இன்றி, வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது. அதானல், *__தர்மி ஞானம் ஸ்வயம் ப்ரகாசம்__*

# *__ஞானத்தை குணமாக உடையது__* என்றால், தன்னைத் தவிர்த்த பிற வஸ்துக்களை அறியும் சக்தி உடையது என்று பொருள்.

சாஸ்த்ரம் இதை *__தர்ம பூத ஞானம்__* என்கிறது. தன்னை தவிர்த்த பிற வஸ்துக்களை தன்னுடைய *__தர்ம பூத ஞானத்தினால்__*, ஒவ்வொரு ஜீவனும் அறிகிறான்.

அதை இந்த ஜீவன், இந்த ப்ராக்ருத லோகத்தில், தன் புலன்களால் உணர்கிறான். முக்த தசையில் *__கரண சாபேக்ஷதை__* கிடையாது. ஆக, இந்த தர்ம பூத ஞானத்திற்கு மலர்ச்சி மற்றும் சுருங்குதல் இயல்பு.

# ஆக, பூரண ஞானத்வம் உடைய ஜீவனுக்கு அக்ஞான விபர்யயங்கள், ப்ரக்ருதி பரிணாமமான, கர்ம க்ருதமான சரீர சம்பந்தத்தினாலேயே உண்டாகிறது

3. ஸ்வாமி தேசிகனின் *__தத்வ த்ரய சுளகம் - அநாத்ம நிரூபணாதிகாரம்__*

*__ஆந்தரமாவது மனஸ். இது சம்சாரிகளுடைய ஸங்கல்ப ஸ்ம்ருத்யாதிகளுக்குத் தானே காரணமாய் பாஹ்ய இந்த்ரியங்களுக்குத் துணையுமாய் இருக்கும்__*

அதாவது, வெளியில் காண முடியாத மனஸ் என்னும் இந்த்ரியம், சேதனனுடைய தர்ம பூத ஞானத்தாலே, முடிவெடுக்கவும் நினைவில் கொள்ளவும் காரணமாய் இருந்து மற்ற புலன்களை இயங்கச் செய்யும்.

*__இது தானே சில இடங்களிலே அத்யவசாய-அபிமான-சிந்தைகளாகிற புருஷ புத்தி விசேஷங்களுக்குக் காரணமான தசையில் புத்தி-அஹங்கார-சித்த சப்தங்களாலும் சொல்லப் படும்__*

அதாவது, மனஸ் என்னும் இந்த்ரியம், சேதனனுடைய தர்ம பூத ஞானத்தாலே, மாறுபட்ட நிலைகளை அடைகிறது ; அதாவது,

அத்யவசாயம் என்பது நிச்சயம் செய்வது. இதுவே புத்தி.

அபிமானமாவது விபரீத ஞான விஷயமாக இருந்து போவது. இதுவே அஹங்காரம்.

சிந்தையாவது நிச்சயம் செய்வதற்கு முன்னால் சிந்தித்தல் என்பதாகிறது. இதுவே சித்தமாகும்.

# ஆக, பூரண ஆனந்தத்வம் உடைய ஜீவனுக்கு துக்கங்களாவன, ப்ரக்ருதி பரிணாமமான, கர்ம க்ருதமான சரீர சம்பந்தத்தினாலேயே உண்டாகிறது

4. ஸ்வாமி தேசிகன்,

***தர்ம பூத ஞானமாவது, பர அவர ஆத்மாக்களுக்கு, ஸ்வாத்மாவையும், ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்களையும் ப்ரகாசிப்பிக்கவற்றான ஞானம்***

***தத்வ பதவீ*** என்கிற க்ரந்தத்தில், அருளி இருக்கிறார்.

அதாவது,

***ஸ்வாத்மாவை ப்ரகாசப் படுத்துவது*** -

***தர்மி ஞானத்தினால்*** தன் இருப்பை மட்டும் அறிந்திருக்கும் சேதனன் மற்றும் பரம சேதனன், தான் எத்தகையவன் என்பதை ***தர்ம பூத ஞானம்*** கொண்டே அறிகிறான்.

அதாவது, இந்த ஜீவாத்மா பகவானுக்கு சேஷன், அணு ஸ்வரூபன் போன்றவைகளை ***தர்ம பூத ஞானம்*** கொண்டே அறிகிறான்.

அதே போல் பரம சேதனனும், தான் ஸர்வருக்கும் சேஷி என்பதையும், விபு ஸ்வரூபன் போன்றவைகளை ***தர்ம பூத ஞானம்*** கொண்டே அறிகிறான்.

***ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்களை ப்ரகாசப் படுத்துவது*** **-** மற்ற சேதன அசேதன வஸ்துக்களின் இருப்பு மட்டும் அதன் தன்மைகளை, ***தர்ம பூத ஞானம்*** கொண்டே, அறிகிறான்.

# ஆக, ஜீவனுக்கு ஸங்குசிதமான தர்ம பூத ஞானம், ப்ரக்ருதி பரிணாமமான, கர்ம க்ருதமான சரீர சம்பந்தத்தினாலேயே உண்டாகிறது

5. ஆக, சம்சாரி ஜீவர்களுக்கு, கர்ம அனுகுணமாக த்ரிகுண ப்ரக்ருதி பரிணாமமான சரீரம் வந்தடைகிறது ;

# ***சுக துக்கங்கள்*** **-** தர்ம பூத ஞானத்தின் விகாரங்கள் ; ஸ்வ ஆஸ்ரய ஜீவனுக்கு உண்டாகும் அனுபவ நிலைகள் அதற்குறிய ***அவஸ்தாந்தராபத்தி***

தர்ம பூத ஞானம் (சேதனர்கள் தன்னை ஒழிந்த பிற வஸ்துக்களை அறிய தன்னுள்ளே கொண்டுள்ள ஞானம்);  இது சம்சார தசையில் பலவாறாக சுருங்கியும், முக்த தசையில் முற்றிலுமாக மலர்ந்தும் இருக்கக் கூடியது.  இதைத் தவிர்த்து, ஸுகம், துக்கம், சிந்தனை, ஸங்கல்பம் போன்றவைகள், தர்ம பூத ஞானத்தின் மாறுதல்கள். அதனால், சேதன த்ரவ்யத்தை சார்ந்தை இருந்தாலும், தர்ம பூத ஞானம் த்ரவ்யமாகிறது.

# ***ஜாக்ருத் சுஷுப்தி ஸ்வப்ன தசைகள்*** **-** விழித்திருக்கும் நிலை (ஞான இந்த்ரியம் மற்றும் மனஸ் இயங்கும் நிலை) ; ஆழ்ந்த உறக்க நிலை (ஞான இந்த்ரியம் மற்றும் மனஸ் இயங்காத நிலை) ; கனவு காணும் நிலை (ஞான இந்த்ரியம் இயங்காது மற்றும் மனஸ் மட்டும் இயங்கும் நிலை). சம்சார தசையில், கர்ண சாபேக்ஷமாக விஷயங்களை க்ரஹிக்கும் போது, இந்த ஜீவர்களின் தர்ம பூத ஞானத்தில் கர்ம க்ருதமான ஞான இந்த்ரியம் மற்றும் மனஸ் த்வாராக விபரீதங்கள் உண்டாகின்றன.

# ***ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரம்*** **-** ஸ்தூல சரீரத்தை விட்டு வெளியேறும் ஜீவன், பூத ஸூக்ஷ்மங்களோடும், ப்ராண வாயு மற்றும் இந்திரயங்களோடும் செல்கிறான் ; ஸூக்ஷ்ம சரீரத்தோடு, சம்சாரி ஜீவர்கள் ஸ்தூல சரீரத்தை விட்டு கிளம்புகிறார்கள். மோக்ஷ உபாயத்தை அனுஷ்டிக்காத சம்சாரி ஜீவர்கள் விஷயத்தில், மற்றொரு ஸ்தூல தேஹம், கர்ம க்ருதமாக ஏற்படும் வரையில், இதே பூத ஸூக்ஷ்மங்களோடும்,  ப்ராண வாயு மற்றும் இந்திரயங்களோடும் அவர்கள் இருந்து போகிறார்கள். ப்ருஹதாரண்யக உபநிஷத் வரி :

***தமுத்க்ராந்தம் ப்ராணோ அனுக்ராமதி ப்ராண அனுக்ராமன்தம் ஸர்வே ப்ராணா அனுக்ராமன்தி***

அதாவது,

சரீரத்தை விட்டு வெளியேறும் ஜீவன், பூத ஸூக்ஷ்மங்களோடும், ப்ராண வாயு மற்றும் இந்திரயங்களோடும் செல்கிறான். பிறகு, ஸ்தூல சரீரத்தை பெறும் போது அத்துடனேயே பெறுகிறான். இதனால், அறிய வேண்டுவதாவது, ஸூக்ஷ்ம சரீரத்தோடு, சம்சாரி ஜீவர்கள் ஸ்தூல சரீரத்தை விட்டு கிளம்புகிறார்கள். மோக்ஷ உபாயத்தை அனுஷ்டிக்காத சம்சாரி ஜீவர்கள் விஷயத்தில், மற்றொரு ஸ்தூல தேஹம், கர்ம க்ருதமாக ஏற்படும் வரையில், இதே பூத ஸூக்ஷ்மங்களோடும், ப்ராண வாயு மற்றும் இந்திரயங்களோடும் அவர்கள் இருந்து போகிறார்கள் ; சரணாகதன் விஷயத்தில், வ்ரஜா நீரை அடையும் வரை ப்ராக்ருத பூத ஸூக்ஷ்மங்களோடும், ப்ராண வாயு மற்றும் இந்திரயங்களோடும் இருந்து, பிறகு வ்ரஜா நீரைக் கடந்து அப்ராக்ருத ஸ்தூல திருமேனியைப் பெறுகிறான்.

6. சம்சாரி ஜீவர்களின் ***சுக துக்கங்கள்***

# பராசர மஹரிஷி,

***பூமான்ன தேவொந நரோ ந பஷுர் நச பாதப:. சரீர ஆக்ருதி பேதாஸ்து பூபைதே கர்ம யோனய:***

அருளினார். அதாவது, இந்த ஜீவர்கள், தேவன் அல்லன், மனுஷ்யன் அல்லன், த்ரியக் (மிருகம்,பறவை போன்றவை) அல்லன், தாவர்கள் அல்லன். ஆனால், இந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஏற்படும் சரீர சம்பந்தம் கொண்டு தன்னை அதுவாக நினைத்து ப்ரமிக்கிறான்.

இந்த ப்ராக்ருத சரீரங்கள் அனைத்தும், கர்ம அனுகுணமாக, வந்தவைகளே.

# ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில்,

***முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில் வண்ணனே அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன் வெந்நாள் நோய் வீய வினைகளை வேர் அறப் பாய்ந்து எந்நாள் யான் உன்னை இனி வந்து கூடுவேன்***

அதாவது, நான் எப்போதோ செய்த வினைகளுக்காக, நீ எனக்கு இந்த உடலைக் கொடுத்து விட்டாய். அது என்னை எந்தப் பக்கம் இழுத்துச் செல்கிறதோ அந்தப் பக்கம் நான் சென்று சிரமப்படுகிறேன். பிறவி என்கிற இந்தத் துன்பம் எப்போது தீரும்? என்னுடைய வினைகள் வேரோடு அழிவதுஎன்றைக்கு? யான் உன் பாதத்தில் சேரும் நாள் எப்போது வரும்? என வருந்துகிறார்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (9-33)

***கிம் புநர் ப்ராஹ்மணா புண்யா: பக்தா ராஜர்யஸ் ததா. அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்***

என்கிறான்.

'அர்ஜுனா ! நிரந்தரம் அற்றதாயும், துக்கமயமான இந்த உலக அநுபவத்தை விட்டு என்னை அடைவதற்காக என்னை குறித்து செயல்களை செய்.' என்று கண்ணன் இந்த ஸ்லோகத்தில் தெளிவு படுத்துகிறான்.

# சரீர ஆத்ம சம்பந்தத்தில், ***தத் ப்ரயுக்த தோஷமாவது*** - அவற்றின் சம்பந்தத்தினால் ஏற்படும் தோஷம் என பொருளாகிறது. சேர்க்கையினால் ஏற்படும் தோஷமாவது, பொதுவாக சம்சாரி ஜீவர்களுக்கு, ***ப்ரக்ருதி சம்பந்தம்*** என்கிற முக்குணங்களாலான சரீர சம்பந்தத்தினால், ஏற்படுகிறது. அநாதியான ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் கலந்த ப்ரக்ருதி என்கிற அசேதன வஸ்துவின் பரிமாணங்களாலான சரீரத்தை அந்த சம்சாரி ஜீவர்கள் பெற்று, அதன் விளைவாக விபரீத ஞானமுடையவனாய், அழுக்கடைந்திருக்கும் நிலையை, ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (3-27)

*ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஸ: அஹங்கார விமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே*

என அருளினான். அதாவது, சம்சாரி ஜீவர்களின் சரீரமானது மூன்று குணங்களாகிய ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் உடைய ப்ரக்ருதி கார்யமான அசேதன தத்வத்தினால் ஆனது. ஆக, சம்சாரி ஜீவர்களின் செயல்கள், அந்த குணத்திற்கு ஏற்ப அமைகிறது ; அதனால் ஜீவர்களுக்கு பலன்கள் பயக்கின்றன என்று ப்ரக்ருதியின் தனமையை உபதேசித்தான் கண்ணன்.

சம்சாரி ஜீவர்களின் தர்ம பூத ஞானம் மூல ப்ரக்ருதி பரிணாமமான இந்த்ரியங்கள் வழியாலே செயல் செய்து, அதனால் பாப புண்ய கர்ம பலன்களைப் பெற்று அதற்கு ஏற்றவாறு ஸுக துக்கங்களை அநுபவிக்கிறான் ; இந்த்ரியங்களும் தர்ம பூத ஞானமும் அசேதனமானபடியால், அவைகளுக்கு ***போக்த்ருத்வம்*** கிடையாது ; ஜீவனுக்கு உண்டான *போக்த்ருத்வம்* காரணமாக ஸுக துக்க அநுபவங்களை சம்சார தசையில் கர்ம அநுகுணமாக அநுபவிபக்கிறான்.

7. ஆத்மா, மனஸ், தர்ம பூத ஞானம் இதன் சம்பந்தம் ஸுக துக்கம், ஸ்தூல ஸூக்ஷ்ம தேஹம், சுஷுப்தி ஸ்வப்ந ஜாக்ருத் தசை - ஒரு விளக்கம் :

# ஆக, ஜீவ ஸ்வரூபம் ஞானமாயும் ஞானத்தை உடையதாயும் இருக்கும் ; சம்சார பத்த தசையில் கர்ண சாபேக்ஷமாக விஷயங்களை க்ரஹிக்க வல்லது ; கர்ம அநுகுணமாக சம்சாரி ஜீவர்கள், தர்ம பூத ஞானத்தினால், அல்ப ஸுகங்களையும் துக்கங்களையும் அநுபவிப்பர் ; இந்த அநுபவத்திற்கு ப்ரக்ருதி பரிணாமமான ஸ்தூல சரீரம் ஹேதுவாகிறது ; ஒரு பிறவிக்கும் மற்றொரு பிறவிக்கும் இடையிலே ஸூக்ஷ்ம ப்ராக்ருத தேஹத்தோடு சம்சாரி ஜீவர்கள் ஸஞ்சரிக்கின்றனர்.

# ஶ்ரீபாஷ்ய *ஸந்த்யாதிகரணம்* (3-2-3)

ஸ்வப்பன தசையில் ஸ்ருஷ்டிக்கப் படும் பதார்த்தம் பற்றிய விசாரம்.

*மாயா மாத்ரம் து கார்த்ஸ்யேந அநபிவ்யக்த ஸ்வரூபத்வாத்* என்கிறது ஸூத்ரம்.

அதாவது, ஸ்வப்ந்த்தில் தேர் குளம் முதலிய பொருள்களை எல்லாம் மாயயால் மட்டுமே பரமாத்மாவால் ஸ்ருஷ்டிக்கப் பட்டன, என பொருள். இந்த ஸ்வப்ந பதார்த்த ஸ்ருஷ்டியில், உறங்குபவனைத் தவிர அவன் அருகில் உள்ள மற்றவர்கள் காண இயலாது. ***ஸ்வப்னத்தில் கூட சின்ன பாப புண்யம் தொலைக்கப் படலாம்***.

# சாந்தோக்ய உபநிஷத் வரி :

*ந ஹ வை ஸ சரீரஸ்ய ஸத : பிரியா ப்ரியயோ :அபஹதி: அஸ்தி அசரீரம் வா வஸந்தம் பிரியாப்ரியே ந ஸ்ப்ருசத:*

எதுவரையில் சரீர சம்பந்தம் உண்டோ அதுவரையில் ஸுக துக்கங்கள் அழிவதில்லை. ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரம் முற்றிலுமாக கழிந்த போதே ஸுக துக்கங்கள் தொடுவதில்லை. கைவல்ய அனுபவத்தில் *துக்கோதர்க்கத்வம்* (ஸுகானுபவம் முடியுமே என்ற துக்கம்) கழிவதில்லை.

ஶ்ரீபாஷ்யத்தில் (2-1-14) ப்ருஹ்ம ஸூத்ர விளக்கம்அளிக்கப் பட்டிருக்கிறது.

*போக்த்ராபத்தே: அவிபாகஸ்சேத் ஸியாத் லோகவத்*

ஸ்தூல ப்ராக்ருத சரீரமானது - சம்சார தசை.

ஸூக்ஷ்ம சரீரமானது மரணம் சம்பவித்த பின்பு உண்டாகும் ப்ராக்ருத சரீரம்

காரண ப்ராக்ருத சரீரமானது - ஸ்ருஷ்டிக்கு முன்பான பிரளய தசையின் நிலை

திவ்ய சரீரமானது அப்ராகிருத திருமேனி

முக்தர்களுக்கு,

*ஸதேஹ, விதேஹ, பஹுதேஹ*

*ஏகதா பவதி, த்ரிதா பவதி, பஞ்சதா பவதி*

போன்ற உபநிஷத் வரிகளுக்கு இணங்க, சரீரத்தோடும், சரீரம் இல்லாமலும், பல சரீரங்களோடும் இருந்து, அவர்களது கைங்கர்யத்தால் எம்பெருமானுக்கு உகப்பை ஏற்படுத்துகின்றனர். நித்ய விபூதியில் முக்தாத்மா 'காண்பதும் கேட்பதும்' என்பதன் விளக்கத்தை தெளிய வேண்டும் - புலன்களின் தேவை இல்லாமல் 'காண்பதும் கேட்பதும்' என்பது ஸாக்ஷாத்கரிப்பதேக் கூறுவதாகும்.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

******

22.1.2023
ஞாயிறு கிழமை

*ப்ருஹ்ம சப்தம் பிராட்டியை குறிக்குமா? - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா*

1. எம்பெருமான் தொடக்கமான முன்னோர் வழியே உபாதேயம் :

# இதிஹாஸ ஸமுச்சயத்தில், மஹரிஷி,

*ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்*

அதாவது, சாஸ்த்திரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருத்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும்,

என அருளிகிறார்.

# யக்ஷன் தருமரிடம் நூறு கேள்விகள் கேட்டான். அதில்,

*அனுஷ்டிக்க வேண்டிய தர்மம் என்பதை எதைக் கொண்டு நீ தீர்மானிக்கிறாய்?*

என்று யக்ஷன் வினவினான். அதற்கு தர்மர்,

*ஸ்ருதிர் விபின்னா ஸ்ம்ருதயோ விபின்னா: நைகோ முனி: யஸ்ய மதம் ப்ரமாணம். தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம் மஹா ஜநோ ஏன கத: ஸ பந்தா:*

என பதிலளித்தார். அதாவது, வேதங்கள் ஒன்றுக்கொன்று முரண் பட்டவை போல் தோன்றுகிறது. ஸ்ம்ருதிகளும் அவ்விதமே. ரிஷிகளோ பலர். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை பேசி வைக்கின்றனர். தர்மம் குகையில் அடைக்கப் பட்டது போல் ரஹஸ்யமானதாக உள்ளது. *ஆகையால் மஹான்களின் மார்க்கத்தையே தர்மமாக பின்பற்றுகிறேன்* என்றார்.

# ஸ்வாமி தேசிகன், *நிகமனாதிகாரத்தில்*

*ஸ்ருதி ஸம்ருதி ப்ரமாணரான பூர்வாசார்யர்கள் கண்டக சோதனம் பண்ணி நடந்த வழியிலே நடக்கையாலே, நமக்கு வருவதொரு தப்பில்லை*

என அருளினார். அதனால், பூர்வ ஆசார்யகளின் க்ரந்தங்களை (ஸங்க்ரஹமாகவோ விசதமாகவோ) விளக்கும் போது, பூர்வாசார்யர்கள் கண்டக சோதனம் பண்ணி நடந்த வழியிலே, இருக்க வேண்டும்.

2. பதங்களின் தீர்ந்த அர்த்தங்களை நிர்ணயிக்க வேண்டிய முறையை ஸ்வாமி தேசிகன், *மூல மந்த்ராதிகாரத்தில்* விளக்குகிறார் :

*அர்த்தாத் ப்ரகரணாத் லிங்காத் ஔசத்யாத் ஏஷ காலத: சப்தார்தா: ப்ரவிபஜ்யந்தே ந சப்தாத் ஏவ கேவலாத்*

அதாவது, ப்ரயோஜநம், சந்தர்பம், அடையாளம், தகுதி, இடம், காலம் இவற்றுக்குத் தக்கவாறு சொற்களில் அர்த்த நிர்ணயம் ஸித்திக்கும் ; இவற்றை கணிசிக்காமல் சொற்களின் அர்த்தங்களை விளக்குவது முறை அன்று.

# பல அர்த்தங்கள் கொண்ட ஒரு பதத்திற்கு, ப்ரகரணத்துக்கு ஏற்ப அர்த்த நிர்ணயம் செய்ய வேண்டும் ; அதாவது, *லயம்* என்கிற பதத்திற்கு, *தன் தன்மையை இழந்து இரண்டு அற கலப்பது* என்றும் *பிரியாதிருப்பது* என்றும் அர்த்தம் உள்ள போது, ப்ரகரணத்துக்கு ஏற்ம அர்த்தம் கொள்ள வேண்டும்.

உதாரணமாக,

'என் மனம் அந்த பாடலில் லயித்து இருந்தது' என்றால், லயமானது மனத்திற்கும் பாடலுக்கும் *தன் தன்மையை இழந்து இரண்டு அற கலப்பது* என்பது பொருந்தாது ; அத்ரவ்யமான பாடலும், த்ரவ்யமான மூல ப்ரக்ருதியான பரிணாமமான மனஸ் என்கிற இந்திரியத்துக்கும் தன் தன்மையை இழந்து கலப்பது பொருந்தாது ; ஆனால், மனஸ் வேறொன்றை சிந்திக்க இயலாமல், கானத்தில் இருந்து *பிரியாதிருப்பது* ஸித்திக்கும்.

'காவிரி ஆறு வங்கக் கடலில் லயத்தை அடைந்துது' என்கிற போது, ஆறு நீரின் (சுத்த நீர்) தனமையை இழந்து, கடல் நீரில் பிரித்து அறிய முடியாதபடி, *தன் தன்மையை இழந்து இரண்டு அற கலப்பது* என்பது ஸித்திக்கும்.

# இப்படி அல்லாத போது *அநுருக்தம்* என்கிற தோஷம் உண்டாகும்.

*அநுருக்தம்* - அதாவது, பல அர்த்தங்களைக் கொண்ட ஒரே பதத்திற்கு, ப்ரகரணத்தை ஒட்டி உகந்த அர்த்தத்தைக் கொள்ள வேண்டும்.

3. ப்ருஹ்ம பதம் பல அர்த்தங்களைக் கொண்டது ; ப்ரகரணத்துக்கு ஏற்ப, நம் பூர்வர்கள் அர்த்த நிர்ணயம் செய்து போந்தார்கள்.

# கர்ம யோக ப்ரகரணத்தில், ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (3-15)

*கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி, ப்ரஹ்ம: அக்ஷர ஸமுத்பவம், தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம, நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம்*

என அருளினான் ; அதாவது, செய்கை ப்ரக்ருதியிடமிருந்து பிறப்பது என்று உணர். ப்ரக்ருதி பரிணாமமான அவ்வுடல் ஜீவனிடம் உண்டாவதாக அறி. ஆதலால் ஸர்வவருக்கும் உள்ள உடலெல்லாம் எப்போதும் வேள்வியில் உண்டாகிறது.

இங்கு, ***கர்ம ப்ரஹ்மோத்பவம்*** என்பதில் உள்ள ப்ருஹ்ம சப்தம் ப்ரக்ருதியைச் சொல்லும். அதாவது, செய்கை ப்ரக்ருதி பரிணாமமான சரீரத்தினின்று உண்டாவதாக அறி

# க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ ப்ரகரணத்தில், ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (13-4)

***ருஷிபி: பஹுதா கீதம் சந்தோபி: விவிதை: ப்ருதக் ப்ரஹ்ம ஸூத்ரபதை: ச ஏவ ஹேதுமத்பி: விநிஸ்சிதை:***

என அருளினான் ; அதாவது, பராசரர் போன்ற ரிஷிகளால் பலவகைகளிலே கூறப் பட்டது ; பலவிதமான சந்தங்கள் (வேத மந்திரங்கள்) மூலமாகவும் தனித்தனியே விசேஷங்கள் கூறப் படுவதால், நல்ல நிச்சயமுடைய காரணங்களாக விளக்கிக் காட்டும் ; ப்ருஹ்ம சூத்திர பதங்களிலும் நிரூபிக்கப் பெற்றது.

இங்கு, ***ப்ரஹ்ம ஸூத்ரபதை: ஏவ*** என்பதில் உள்ள ப்ருஹ்ம சப்தம் ஈஸ்வரனைச் சொல்லும். அதாவது, ப்ருஹ்ம சூத்திர பதங்களிலும் நிரூபிக்கப் பெற்றது

# பக்தி யோக ப்ரகரணத்தில், ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (17-23)

***ஓம் தத் ஸத் இதி நிர்தேஸோ ப்ரஹ்மண: த்ரிவித: ஸ்ம்ருத: ப்ராஹ்மணா: தேந வேதாஸ்ச யஜ்ஞாஸ்ச விஹிதா: புரா***

என அருளினான் ; அதாவது, 'ஓம் தத் ஸத்' என்ற மூன்று விதமாக வேதத்தோடு சம்பந்தம் பெற்றது என்பர் ; அதனால் முன்பு, வேதம் ஓதுவோரும், வேதங்களும், வைதீக க்ரியைகளும், இந்து மூன்று சொற்களுடம் சம்பந்தம் உள்ளபடி என்னால் ஏற்படுத்தப் பட்டது.

இங்கு, ***நிர்தேஸோ ப்ரஹ்மண: த்ரிவித: ஸ்ம்ருத:*** என்பதில் உள்ள ப்ருஹ்ம சப்தம் வேத ப்ரமாணத்தைச் சொல்லும். அதாவது, 'ஓம் தத் ஸத்' என்ற மூன்று விதமாக வேதத்தோடு சம்பந்தம் பெற்றது என்பர்.

3. இந்த ப்ரபஞ்ச உற்பத்திக்கு, ப்ரஹ்மமேதான் (ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே), ***உபாதான, நிமித்த, ஸஹகாரி காரணங்களாக*** இருக்கிறான், என்பது ப்ரமாண ஸித்தம்.

# இதையே, உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணமாக க் கூறப்படுகிறது -

***யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி***

அதாவது,

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ஸர்வேஸ்வரன்.

# இதையே, உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய 'ப்ருஹ்ம ஸூத்ரம்' (1ம் அத்யாயம் 1ம் பாதம் 2ம் அதிகரணம்)

***ஜன்மாத்யஸ்ய யத:***

அதாவது, உலகம் எவனிடம் இருந்து உண்டாகிறதோ அவனே சித் அசித்களோடு கூடிய பரம் பொருள். (ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

# ப்ரளய காலத்திலும், அழியாமல் இருப்பவனே, ஸ்ருஷ்டிக்கு காரணமாக முடியும். இவ்விஷயத்தை, மஹோபநிஷத்தில்,

*ஏகோஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஸாந நேமே ஜாவா ப்ருத்வி நக்ஷத்ராணி*

என்கிறது. அதாவது, நாராயணன் ஒருவனே, மஹா ப்ரளய காலத்தில், இருந்தான்; சதுர்முக ப்ருஹ்மாவும் இல்லை; சிவனுமில்லை; லோகங்கள் இல்லை; நக்ஷத்திரங்கள் இல்லை என்று மஹாப்ரளய காலத்தில் பல இல்லாத வஸ்துக்களையும் உபநிஷத் கூறுவதினால், மஹாப்ரளயத்தில் இருக்கிற ஸ்ரீமந் நாராயணனே ஜகத் காரணபூதன் என்பதாகிறது.

# ப்ரளய காலத்தில் ஸகல சேதன அசேதன வஸ்துக்களும், பகவானிடத்தில் லயத்தை அடைந்து கிடக்கிறது. ஸ்ருஷ்டி துவக்க காலத்தில், பகவத் ஸங்கல்பத்தினால், ப்ரபஞ்சம் உருவாகிறது. சாந்தோக்ய உபநிஷத், இதனை,

***தத்ஜக்ஷத பஹுஸ்யாம்*** (நான் பலவாக மாறுவேன் என்று ஸங்கல்பம் கொள்கிறான்)

என்றும்,

***அநேந ஜீவேந ஆத்மனா அநு பிரவிஸ்ய நாம ரூபா வ்யாகரவாணி*** (ஸர்வ அந்தர்யாமியான நான் மாறுபட்ட உருவ பெயர்களைக் கொண்டு வஸ்துக்களை ஸ்ருஷ்டிக்கிறேன - அதாவது, மஹத் தொடங்கி ப்ரஹ்மாண்டம் வரை ப்ரஜாபதியையும் அவன் சேர்த்தே ஸ்ருஷ்டிக்கிறான்)

என்றும், தான் தன்னை கார்ய வஸ்துக்களாக மாற்ற நினைப்பதால், இந்த ப்ரபஞ்சம் உருவாகிறது.

# ஆக, நாராயணன் ஒருவனே ஜகத் காரணன் ; அதனால் அவனே ப்ருஹ்ம பதத்திற்கு விஷயமாகிறான் ஏனெனில், ***ஏகமேவ அத்விதீயம்*** ( சாந்தோக்ய உபநிஷத்) - பரம்பொருள் ஒன்றே உளது; மற்ற எதுவும் கிடையாது. அதனால் பெரிய பிராட்டியின் ஜகத் காரணத்வம் நிஷேதிக்கப் படுவதாக ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கூறுவர்.

4. பிராட்டிக்கு ஜகத் காரணத்வம், அதனால் ப்ருஹ்ம வாசகம் உண்டு என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் ; ஆக, பிராட்டியோடு கூடிய நாராயணனே (விசிஷ்ட ப்ருஹ்மமே) ஸர்வேஸ்வரன் என்பது விசிஷ்டாத்வைத ஸத் ஸம்ப்ரதாயம்.

# ***ஜகத் காரணத்வம்*** (உலக படைப்பிற்கு காரணம்) - பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், ***பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை ஸர்வேஸ்வரன்*** என கொள்ள வேண்டும்.

*மாயா வா ஏஷா நாரஸிம்ஹி ஸர்வமிதம் ச்ருஜதி ஸர்வமிதம் ஸம்ஹரதி ஸர்வமிதம் ரக்ஷதி*

என்று ந்ருஸிம்ஹ தாபநீய உபநிஷத் பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் உண்டு (ச்ருஜதி, ஸம்ஹரதி, ரக்ஷதி) என ஸ்பஷ்டமாகக் கூறுகிறது.

# ***அனந்தத்வம்*** (விபுத்வம்) - பிராட்டியோடு கூடிய எம்பெருமானுக்கே விபுத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், ***பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள்*** என கொள்ள வேண்டும்.

***யதா ஸர்வ கதோ விஷ்ணு: ததை வையம் த்விஜோத்தம*** என்று பராசர மஹரிஷி,

எம்பெருமான் அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருப்பது போல், பிராட்டியும் வ்யாபித்திருக்கிறாள், என்கிறார்.

இதனால், பிராட்டிக்கும் விபு ஸ்வரூபம் உள்ளது என அறியலாம்.

# *ஸித்தோபாயத்வம்* (பலனை அளிக்கும் தன்மை) - பிராட்டிக்கு ஸித்தோபாயத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், ***பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள்*** என கொள்ள வேண்டும்.

***தாம் பத்மிநேமீம் சரணம் அஹம் ப்ரபத்யே: லக்ஷ்மீர்மே நஷ்யதாம் த்வாம் வ்ருணே***

என்கிற ஸ்ருதி வாக்யத்தால், லக்ஷ்மி தேவியை சரணமடைந்து இல்லாமையைப் போக்கி அருளப் ப்ரார்த்திப்பதாக கூறுவதால், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

***லக்ஷ்ம்ய ஸஹ ஹ்ருஷிகேச: தேவ்யா காருண்ய ரூபயா. ரக்ஷக ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே*** என்கிற பாஞ்சராத்ர சாஸ்த்திரங்களினாலும்,

எப்போதும் பிரியாத லக்ஷ்மி பிராட்டியுடன் சேர்ந்து எம்பெருமான் ரக்ஷண கார்யத்தை செய்கிறான், என அறியலாம். இதனாலும், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

***யக்ஞ வித்யா மஹாவித்யா குஹ்ய வித்யா ச ஷோபனே. ஆத்ம வித்யா ச தேவி, த்வம் விமுக்தி பல தாயிநி*** என்று பராசர மஹரிஷி,

பெரிய பிராட்டியாருக்கு முக்தி அளிக்கும் தன்மை உடையவள் என்கிறார்.

5. பாணினியின் வ்யாகரண சாஸ்த்திரங்களைக் கொண்டு அதீந்த்ரிய விஷயங்களில் அர்த்த நிர்ணயம் செய்வது அநுசிதம் ; மநு ஸ்ம்ருதியில் கூறப்படுவதாவது,

***ஆர்ஷம் தர்மோபதேசம் வேத சாஸ்த்ரா விரோதிநா யஸ்தர்க்கேண அனுஸந்ததே ஸ தர்ம வேத நேத்ர:***

அதாவது, வேத வேதாந்தங்களுக்கு விளக்க உரையாக உள்ள க்ரந்தங்களை, அதாவது ஸம்ருதி, புராணம், ப்ருஹ்ம ஸூத்ரம் போன்றவைகளை, விளக்கும் போது, வேத வேதாந்த வரிகளுக்கு, விரோதம் வராத வகையில் யார் அறிந்து கொள்கிறானோ அவனே தர்ம சாஸ்த்திரம் அறிந்த ப்ராமாணிகன் ஆவன். இவ்விதம் உணராதவன் தர்ம சாஸ்த்திரம் அறிந்தவனாக மாட்டான்.

# ஸ்வாமி தேசிகனின் *ஸ்ரீபரமத பங்க* நிரஸன பாசுரம் :

***சாயா மறைகளில் சத்தம் தெளிந்திடச் சாற்றுதலால், தூயார் இவர் என்று தோன்ற நின்றே பல சூதுகளால், மாயா மதமும் மறு சின வாதும் பவுத்தமும் சேர், வையாகரணர் சொல்லும் மறு மாற்றங்கள் மாற்றுவமே***

அதாவது, ஸ்வரமும் அக்ஷரமும் மாத்திரை அளவும் தவறாமல் உச்சரிக்க வேண்டிய வேதங்களில் உள்ள பதங்கள் நன்கு விளங்கும் படி வியாகரண சாஸ்திரத்தின் உதவியால் ஸ்தாபித்த படியால், இந்த வையா கரணர் பரிசுத்தர் என்று உலகுக்குத் தோன்றும்படி இருந்தே பல கபடங்களால், மாயையைக் கொள்கின்ற அத்வைத மதத்தையும் வேறு ஒரு ஜைன மதம் என்னும்படி உள்ள பாஸ்கர யாதவ மதத்தையும் புத்த மதத்தையும் (ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்தின் அவித்யா கல்பிதம் என்பதில் அத்வைதிகள் போலேயும் ; பரிணாம விஷயத்தில் பாஸ்கர யாதவ மதம் போலேயும் ; பிரதீபை ஞானத்தால் புத்த மதம் போலேயும் ) வையாகரண வாதம், வையாகரண மதத்தோரால் சொல்லப்படுகின்ற எதிர்வாதங்களை ஒழித்து விடுவோம்.

# ஸ்வாமி தேசிகன், ***ப்ரபாவ ரக்ஷாதிகாரத்தில்*** ப்ரமாணக்களைக் கொண்டு, சம்சாரி ஜீவர்களின் எந்த விதமான செயல்களானது பகவத் ப்ராப்திக்கு விரோதி என விளக்கியுள்ளார். அதில், இதிஹாஸ சமுச்சயத்தில், வ்யாஸர் அருளியதாவது:

***ந சப்த சாஸ்த்தர அபிரதஸ்ய மோக்ஷோ, ந போஜநாச்சாதன தத்பரஸ்ய, ந சைவ ரம்யா வஸத ப்ரியஸ்ய, ந லோக சித்த க்ரஹணே ரதஸ்ய***

அதாவது, மோக்ஷ பலனிற்கு எதிரியானது:

***ந சப்த சாஸ்த்தர அபிரதஸ்ய* -** பாஷையில் உள்ள சப்தங்களையும் அதன் இலக்கணங்களையும், மேலும் சங்கீத நியமங்களையும் கொண்டு சாஸ்த்திர அர்த்தங்களில் மயங்குபவர்க்கு

***ந போஜநாச்சாதன தத்பரஸ்ய* -** உலக விஷயங்களான போஜனம், வஸ்த்தரம் ஆகியவற்றில் ஈடுபாடு உள்ளோர்க்கும்

***ந சைவ ரம்யா வஸத ப்ரியஸ்ய* -** க்ருஹத்தை அழகு படுத்த இச்சை உள்ளோர்க்கும்

***ந லோக சித்த க்ரஹணே ரதஸ்ய* -** உலகத்தாரை கவரும் படி, பேச்சு சாமர்த்யத்தால் ஸம்ப்ரதாய விஷயங்களை மாற்றி நிர்வாஹம் பண்ணுவோர்க்கு.

# இதன் தாத்பர்யத்தை, பூர்வாசார்யர்கள் வழியிலே க்ரஹிக்க வேணும் ; ஸ்வாமி தேசிகன், ***தத்வபதவீ*** என்கிற சில்லரை ரஹஸ்யத்தில்,

***முக்திக்கு அருள் சூட மூன்றைத் தெளி முன்னம் இத்திக்கால் ஏற்கும் ஹிதம்***

என்று, மோக்ஷத்திற்கான பகவத் க்ருபையை பெறும் முன் தத்வ த்ரயத்தை (சேதனம், அசேதனம், ஈஸ்வரன்) அறிவதால், உபாயம் ஸித்திக்கும் என அருளினார்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******